# வாழ்க்கைப் புயல்

73

C.N. அண்ணாதுரை, M.A.

பரிமளம் பதிப்பகம்,
காஞ்சீபுரம்.

முதல் பதிப்பு—மே, 1948.

இரண்டாம் பதிப்பு—மே, 1950.

மூன்றாம் பதிப்பு—ஜூன், 1952.

75932

'திராவிட நாடு' அச்சகத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

விலை அணா 12.

# பதிப்புரை

வாழ்க்கைப் புயல், இப்பொழுது மூன்ருவது வெளியீடாக தமிழகத்திற்கு அளிக்கப்படுகிறது. இதில் சூதாடி, கைதிகள், விபசாரி, நாடோடி, கள்ளன் ஆகியோரைச் சந்திக்க வைக்கிருர் ஆசிரியர். வாழ்க்கைப் புயல் வீசும் வேகம் வெளிப்படுகிறது, இவர்களை நாம், கண்ட பிறகு. 'வாழ்க்கைப் புயலை' வெளியிடும் வாய்ப்பு பெற்றமைக்கு மகிழ்கிருேம்.

பரிமளம் பதிப்பகத்தார்.

# உள்ளே


சூதாடி

கைதிகள்

அவள் விபசாரியானாள்

நாடோடி

கள்ளன்

# சூதாடி

"இஸ்பேட் இரண்டடி, மேல்ஜாக்கும் இருந்தது, சரி ஒரு கை பார்த்துவிடுவது என்று தீர்மானித்து, 2[illegible] கேட்டுவிட்டேன்; சனியன்போல, கிளாவர் மணிலா ஒன்று ஷேக்காக இருந்து தொலேச்சுது....."

"எதிர்க் கையிலே கிளாவர் ஜாக்கியோ"

"ஆமாம், அதை ஏன் கேட்கிறே, போ. கிளாவர் ஜாக்கேதான், அவன் முதலிலேயே கட்டினுன்......"

"அட சனியனே! முதலிலேயே அதுதானு....."

"ஆமாம் சார்! இல்லையானு, எதிலாவது தள்ளித் தொலேத்துவிடுவேனே, கிளாவர் மணிலாவை. சரி என்ன செய்வதுன்னு மணிலாவைப் போட்டேன்"

"போடாவிட்டா, விடுவானு? பிறகு?....."

"பிறகா! மேல்ஜாக்கி இருந்ததல்லவா என்னிடம், அந்த ஜாதி அவனிடம் இல்லை; ஒரே ஆஸ் இருந்தது, அதைத் தள்ளிவிட்டான், நான் கவனிக்கவில்லை; ஜாக்கியை தட்டினேன், அவ்வளவுதான், ஒரு 'தழை', எட்டாம் 'பந்து' அதனாலே வெட்டிவிட்டான். அந்த ஜாக்கும் போச்சு"

"முட்டாள்டா நீ. ஏன் முதலிலேயே துருப்பைத் தட்டக்கூடாது?"

"தட்டித் தொலைச்சேண்டா! கணக்கு எண்ணினதிலே தவறிவிட்டேன். துருப்புக் கீழே விழுந்துவிட்டதுன்னு, கணக்குச் செய்துவிட்டேன்"

"சரிதான், தப்பாகக் கணக்கும் போட்டே; ஷேக் மணிலா, வேறு. இந்த இலட்சணத்துக்கு இருநூற்று இரு[illegible] கேட்டுட்டே, போடா, போ, பணம் போகாமே, என்ன [illegible]தும், நீயும் ஒரு ஆட்டக்காரன்தானா?"

"சும்மா இருடா! போன வாரம், அதைவிட மோசமான சீட்டு, தெரியுமா? துருப்பிலே, மணிலா கிடையாது—ஷேக் மணிலா ஒண்ணு, வேறே ஜாதியிலே—ஆனா ஜெயித்துவிட்டேன்; தெரியுமா? துருப்பைத் தட்டினேண்டா; ட்டான்னு கீழே மணிலா விழுந்தது, என் 'ஜோடி', ஆளிடம் மணிலா ஷேக்; மறுபடியும் துருப்பிலே ஒரு தழையைக் கொடுத்தேன்......"

"ஏன்?"

"துருப்பு ஆஸ் வெளியே அல்லவா இருக்கு?"

"அட பாதகா! துருப்பிலே, மணிலாவும் கிடையாது, ஆசும் இல்லை, ஆட்டம் கேட்டுட்டயே, என்ன தைரியண்டா உனக்கு"

"கேட்டது மட்டுமா, ஜெயித்தேனேடா ஆட்டத்தை —துருப்புத் தழையைத் தட்டினேனா, ஆஸ் போட்டுப் பிடித்தான்; அவன் ஜதை ஆள் இருக்கானே, அவன் "தொப்புன்னு" ஜாக்கியைத் தூக்கிப்போட்டான் அதன் தலையிலே; எந்த ஜாக்கி தெரியுமோ? நான் ஷேக் மணிலா வைத்திருக்கிறேனே, அதே ஜாக்கி. அவ்வளவுதான், அந்தப் பிடியிலே, அவன் கண்டதோடே சரி. நம்ம ஷேக் மணிலா பிழைச்சுது. ஆட்டமும் ஜெயித்தது. அப்படி, சில வேளையிலே, எவ்வளவு மோசமான சீட்டா இருந்தாலும் ஜெயித்துவிடுது, சில நேரத்திலே கல்லாட்டம் சீட்டு இருந்தும் தோத்துப் போகுது."

"ஆமாம்! சரி. போடுவமே நாலு ஆட்டம்"

"இரண்டே போரா?"

"ஆமா, இரண்டு பேர்லே முன்னூத்தி நாலு, ரொம்ப ஜோரா இருக்கும்டா"

"மேஸ் என்னா?"

"அரையணா ஓரணா"

"சே! வேண்டாண்டா. காலணா அரையணா போதும்"

"சரி" போடு. அவங்க வருவதற்குள்ளே, நாலு ஆட்டம் போடலாம்"

இது, பங்களா வாசற்படியை அடுத்து, மோட்டார் ஷெட்டில்!- பங்களா சொந்தக்காரர் பார்த்தசாரதி முதலியாரின் மோட்டார் டிரைவர் பானுவுக்கும், முதலியாரைப் பார்க்கவந்த முத்துசாமி ஐயரின் மோட்டார் டிரைவர் மோசசுக்கும், நடந்த பேச்சு. ஐயர் முதலியாரிடம் பேசிக் கொண்டிருக்கிறார் உள்ளே. மோட்டார் ஷெட்டிலே 304

ஆரம்பமாகிவிட்டது. மளமளவென்று மோசசுக்கு இரண்டேகாலணு போய்விட்டது; பணமாகப் போன இரண்டே காலணுவுடன், தோல்வியால் வந்த கோபத்தை மாற்றிக்கொள்வதற்கு, இரண்டு கத்தரிக்கோல் தீர்ந்துவிட்டது; அது வேறு நஷ்டம்; பணம் அப்படியும் கொஞ்சம் புகைந்துபோயிற்று. பாலுவுக்குப் பரம சந்தோஷம். மோசசுக்குக் கவலை. இருவருக்கும், ஐயரின் குரல் கேட்கவில்லை. அவர் மோட்டார் ஆரன் செய்தபோதுதான் மோசஸ் அலறி அடித்துக்கொண்டு, எழுந்து ஓடினுன். ஐயர் கோபமாக இருந்தார். அவசரமாக மோட்டாரண்டை சென்றுன், மோசஸ்.

"கழுதே! என்னடா இது? நான் கத்து கத்துன்னு கத்திண்டிருக்கேன், எங்கே போயிருந்தே"

"ஷெட்டுக்கு......"

"ஷெட்டிலே என்ன வேலே உனக்கு?"

"நம்ம கார் பாட்ரி தொல்லே கொடுக்குது பாருங்கோ அதுக்காக......"

"304 ஆடிஞ, பாட்ரி சரியாப்பூடும்ஞெ அவன்"

மோசஸ் தலையைச் சொரிந்தான்—ஐயருக்கு எப்படியோ தெரிந்துவிட்டது, சீட்டாடிக்கொண்டிருந்த விஷயம். குறும்புப் பார்வையுடன் தோட்டக்காரப் பையன் நின்றுகொண்டிருந்ததை மோசஸ் பார்த்தான். பயல் இவன்தான் கலகமூட்டிவிட்டான் என்று தெரிந்தது. தெரிந்து? பிறகு ஒரு சமயம் கவனித்துக்கொள்வோமென்று தீர்மானித்துக் கொண்டு, மோட்டாரைச் சரிபார்ப்பதுபோல இருந்தான். ஐயர் எதிரே—கார் நகர்ந்தது—ஐயர் பேசலானுர்.

"மடையன். இந்தச் சூதாடும் புத்தி உனக்கிருக்கும் வரைக்கும் நீ ஏதடா, உருப்படுவது? எப்பப் பார்த்தாலும், இந்தச் சூதாட்டந்தானே உனக்கு. நீ எப்படி யோக்யமாக நாணயமாக இருக்கமுடியும்? சூதாட்டக்காரப் பயலிடம், எப்படிடா, நாணயம் இருக்கும்?" என்று புத்தி கூறும் பாவனையிலே, திட்டிக்கொண்டே இருந்தார். மோசஸ் என்ன பதில் கூறமுடியும்; கோபந்தான்; ஆனால் அவனோ டிரைவர்; அவரோ முதலாளி; கோபித்து என்ன செய்வது; எதிரே வந்த, இரட்டைமாட்டு வண்டிக்காரன்மீது காட்டினான் கோபத்தை எல்லாம், "புத்தியில்லேடா நாயே! நடு ரோட்டிலே என்னடா, வண்டி? ரொம்பத் திமிருடா உங்களுக்கெல்லாம்; என்ன ஆறணாவுக்குக் கேட்பாரத்துக்கிடந்த —ைக்கக் கட்டு இப்ப ஒண்ணரைரூபாய்க்கு விக்கிறதாலே உங்களுக்குத் தலைகால் தெரியலே"

மோசஸ் சொன்ன வார்த்தை, வண்டிக்காரனுக்கு மட்டுமல்ல; மோட்டாருக்குள்ளே உட்கார்ந்துகொண்டிருக்கும் ஐயருக்குந்தான் பொருந்தும். ஐயருடைய "அம்சா மார்க் சோப்" கேட்பாரற்றுத்தான் கிடந்தது. யுத்த காலத் தேவையினாலே, டஜன் ஆறணா தாளிக்கையில்லாத சோப்பு ஒன்று ஆறணாவுக்கு விற்றது, அதனாலேதான் மோசசும் மோட்டாரும், ஐயருக்குக் கிடைக்க முடிந்தது; இது மோசசுக்குத் தெரியும். தெரிந்ததாலேதான், வண்டிக்காரனைத் திட்டினான். ஐயர், கனைத்தார்! அவ்வளவுதானே அவர் செய்ய முடியும்? கேட்க முடியுமா, "டே! மோசஸ்! நீ என்னை மனதிலே வைத்துக்கொண்டுதான் வண்டிக்காரனை திட்டினாய்" என்று. "சரி! விடடா! இந்தக் கிராமத்தான்கள் இப்படித்தான். நீ விடு, காரை" என்றார். மோசசுக்கு, டபுல் மேஸ் வந்ததுபோன்ற சந்தோஷம். கொஞ்சதூரம்

சென்று, வேறோர் வீட்டு வாசலில் நின்றது மோட்டார். 'ஆரனை' அடிக்கச் சொன்னார்; இரண்டு மூன்று தடவை அடித்தானதும், உள்ளே இருந்த ஐயரின் மற்றொரு நண்பர், அவசர அவசரமாக, கோட்டிலே ஒரு கையுடன் ஓடி வந்து காரில் ஏறினார். கார் புறப்பட்டது, உள்ளே பேச்சு ஆரம்பித்தது.

முத்துச்சாமி ஐயர் :—சீனு தெரியுமோ விஷயம்?

சீனு:—என்ன? முடிச்சுட்டேளா?

மு:—முடியாமே என்னடா, எல்லாம், எடுத்துப் பேசறதிலேதானே இருக்கு.

சீ:—முதலி, ரொம்ப ஜாக்ரதையான பேர்வழியாச்சே. கொஞ்சத்திலே அகப்பட்டுக்கொள்ளமாட்டானே.

மு;—அவன் 'சிட்டு' என்றேன்னு எனக்குத் தெரியாதா? அதை வெட்டுவதற்கு என்னிடம் துருப்பு இல்லையா?

சீ,—ஆமாம்—நடந்ததைச் சொல்லும்—நிஜமாவா சிக்கிண்டான்.

மு:—டாட்டா ஷேர் வேணுமான்னு ஆரம்பிச்சேங்காணும் முதலிலே......

சீ: சாமார்த்தியமாகத்தான் ஆரம்பிச்சிருக்கீர்—முதலிலே உமக்கு ஷேர் வேணும்னு பேச்சு ஆரம்பிச்சிருக்குதா படிக்கிறாது.

மு: முட்டாள்தானே ஓய், தன் கைத் துருப்பைப் பாழாக்கிண்டு, பேந்தப் பேந்த விழிப்பான். நானாகப் போய், உம்ம 'லட்சுமிராஜ்' ஷேர் விலைக்குத் தருகிறீரான்னு கேட்கணுமா?

சீ:- உமக்கா சொல்லணும்! சரி, டாட்டா வேணுமான்னு ஆரம்பிச்சீர்—பிறகு......

மு : டாட்டா தானய்யா உனக்குத் தெரியும்—என்னு அதுதானே பிரக்யாதியா இருக்கு — மற்ற ஷேரெல்லாம் மண்ணுன்னு நினைக்கிறீராக்கும்னு அவன் ஆரம்பிச்சான்.

சி : ஓஹோ! அவன் அப்படி ஆரம்பிச்சானா? அதாவது, லட்சுமிராஜ் ஷேரின் பெருமையைச் சொல்ல அஸ்திவாரம் போட்டான்.

மு : போட்டான்! மண்டுவுக்கு, அவன் போடுகிற அஸ்திவாரத்தை நான் இடிக்கிறேன் என்பது தெரிந்ததா! "முதலியார்! டாட்டா கம்பெனி ஷேர்னா, அது பவுன் மாதிரி, மற்றதுகளை அப்படிச் சொல்ல முடியாது; ஆனா நீர் வேறு மாதிரியாகத்தான் பேசுவீர், என்று..." என்று இழுத்தாப்போலப் பேசினேன். உடனே, கோபம் வந்துவிட்டது முதலியாருக்கு, "அப்படியானா, லட்சுமிராஜ் ஷேர் தம்பிடிக்குப் பிரயோஜனமில்லேன்னு சொல்லுமே" என்று சீறினான். "முதலியார்! கோபப்படாதீர்கள். என் வாய் கொஞ்சம் அறுதல். நான் புறப்படும்போதே, நாம் வாயைத் திறந்து ஒண்ணும் பேசப்படாது, பேசினா, நாம் சத்பத்துக்குத்தான் பாடுபட்டோம் என்கிற விஷயம் தெரியாமல் முதலியார் நம்மீதுதான் கோபிப்பார்னு நினைச்சேன். ஆனா, பிறகு, எப்படி நமக்குத் தெரிந்ததை அவரிடம் சொல்லாமலிருப்பது—நமக்கு வந்தால் என்ன, அவருக்கு நஷ்டம் வந்தால் என்ன; அவர் நம்ம பால்ய சினேகிதராச்சேன்னு மனசு அடிச்சிண்டது. அதனாலேதான் இந்தப் பேச்சையே ஆரம்பிச்சேன், உமக்குக் கோபம் வர்ரது சகஜம், என்னு, லட்சுமிராஜ் ஷேர் உம்மிடம் ஐம்பதோ நூறோ இருப்பதாகக் கேள்வி எனக்கு......" என்று சொன்னேன். "அட, ஐந்நூறு இருக்கய்யா, அதுக்கென்ன இப்போ. 'லட்சுமிராஜ்' ஷேரை, நீ விள்ளுக்கிறான்னு—

நினைச்சிக்கோ, எனக்குத் தெரியும் அதனுடைய மதிப்பு" என்று மேலும் கோபமாகவே சொன்னார்.

சி,—ஆமாம்ஹ, அவன் பிடிவாதக்காரன்......

மு:—பிடியும் வாதமும், கேளும் மேற்கொண்டு நடந்ததை. முதலியார்! நீங்க, அதற்குப் பேரு லட்சுமின்னும் ராஜான்னும் இருப்பதாலேயே மதிப்புக் குறையவே குறையாதுன்னு நினைக்கிறீரான்னு கேலி செய்து, கோபத்தை இன்னும் கொஞ்சம் ஏற்றிவிட்டேன்.

சி:—துருப்புத் தழையை இறக்கி, எதிர்க் கை ஜாக்கியைக் கீழே விழவைக்கிறமாதிரியாகச் செய்தீர்.

மு:—கேளுமய்யா, விஷயத்தை, லட்சுமி ராஜாவுக்கு என்ன குறைவுன்னு சொல்கிறீர் இப்போ. சினத்துக்காளே, அவன் கேத்துத் தலைகீழாக நின்று பார்த்தான், அதை வாங்க, என்று அப்போதுதான், உன் விஷயத்தை ஆரம்பித்தார்.

சி:- பார்த்தீரா! அவ்வளவு நேரம், என் பேச்சையே எடுக்கவில்லை......"

மு:- நான் மட்டும், தந்தியை உடனே எடுத்துக் காட்டினேனா?

சி:- எந்தத் தந்தியை?

மு:- அதுதானய்யா, என் மாமியாளுக்கு உடம்பு சரியில்லைன்னு தந்தி வந்ததே, நேத்தைக்கு உம்மிடம் காட்டலே நான்.

சி:- ஆமாம் அந்தத் தந்தி எதுக்கு?

மு:- அதுதான் ஓய், துருப்பு ஜாக்கியா இருந்தது. கேட்டுண்டுவாரும் விஷயத்தை. முதலியார், லட்சுமிராஜ் பற்றிப் பிரமாதமாகப் புகழ்ந்தான பிறகு, பொறுமையாகச் சகலத்தையும் கேட்டுண்டு இருந்துவிட்டு, "முதலியார்! இதைப் பாருங்கள்" என்று சொல்லித் தந்தியை நீட்டினேன். வாங்கிப் பார்த்தான் – முகம் வெளுத்துப் போச்சு.

சி:- ஏன்?

மு: -ஏனும்? தந்தியிலே என்ன இருந்தது, நீர் சரியா வாசிக்கலையோ?

சி:- உம்ம மாமியாருக்கு.........

மு:-ஆமய்யா, ஆபத்தா இருக்குன்னு இருந்தது. அது நேக்குத் தெரியும், உமக்குத் தெரியும், அவன் கண்டானோ அதை. தந்தியிலே என்ன வாசகம் இருந்தது.

"லட்சுமி ராஜ் சிங்கிங்" (Lakshmi Raj sinking) அதாவது, லட்சுமி ராஜ் பிராணன் போயிண்டிருக்கு; முழுகிண்டிருக்குன்னு அம்பி தந்தி கொடுத்திருந்தான். முதலியாருக்கு அந்த சூட்சமம் என்ன தெரியும்? லட்சுமி ராஜ் என்றால், 'ஷேர்' என்று எண்ணிக்கொண்டார்— சிங்கிங், முழுகிண்டிருக்குன்னு, எப்படி இருக்கும் அவனுக்கு. "இருக்குங்களா?" என்று பயந்து கேட்டான். அம்பிக்கு நான் சொல்லி வைத்திருந்தேன்; லட்சுமி ராஜ் ஷேர் விஷயமா. அதுவும் நீர் அதை வாங்கி இருந்தாலே, முதலியார் தெரியாமலா வாங்கி இருப்பார், நாமும் அதையே வாங்கிப்போட்டு வைப்போம்னுதான் நினைச்சேன். ஒரு நிமிஷத்திலே ஒன்பது தடவை, தந்தியை மறுபடியும் மறுபடியும் பார்த்தான்—என்ன பண்ணுவான்—தந்தியை மேஜைமேலே வீசினான்—பயல்கள் என்னை ஏமாத்தி

விட்டான்கள்—லட்சுமிராஜ் கஸ்மாதிரி, ஆசையாதுன்னு சொல்லி ஆசை காட்டிஞர்கள், என்று கோபமாகப் பேச ஆரம்பித்தார். ஆமாம், ஷேர் வியாபாரமே ஒரு சூதாட்டந் தானே என்று நான் சொன்னேன்........சூதாட்டம் தேவலாம், இது மகா பெரிய சூதாட்டமாக அல்லவா இருக்கு என்று ஆயாசப்பட்டார். சரிதான் முதலியாரே! தந்தி எனக்குத்தான் வந்தது, ஊரிலே யாருக்கும் தெரியாது— அம்பிக்கு உள் உளவு தெரியும். அதனாலே அவனுக்கு இரகசியம் முதலிலே தெரிந்துவிட்டது. அதனாலே யாருக்காவது தள்ளிவிட்டுவிடும் அந்தச் சனியனை என்றேன். அவன், யாரையாவது பார்க்கும்படி என்னையே கேட்டுக் கொண்டான்.

சி:—சரின்னு ஒப்புண்டாக்கும்.

மு;—மண்டுவா நான், நான் எப்படி முதலியாரே, சத்யத்துக்கு விரோதமாகப் போகமுடியும்— மனதறிந்து பொய் பேசறதின்னு.....என்றேன். சரி, எனக்கு ஒரு உபகாரம் செய்யுங்கள், அது போதும். லட்சுமிராஜ் ஷேர் விழுந்துவிட்டதுங்கிற விஷயத்தைமட்டும், வெளியே சொல்லாமலிரும் என்று கெஞ்சினன். சரின்னு ஒப்புக் கொண்டேன்.

சி:—பேஷ்! பலே சமர்த்தா முடித்திருக்கிறீர் காரியத்தை.

மு,—ஆகையினுலே, நான் மோட்டாரை நிறுத்தச் சொல்கிறேன். இறங்கி, எதிரே பஸ் வரும். வழிண்டு நேரே முதலியாரிடம் போனு, காரியம் பலித்துவிடும்— என்னைப் பார்த்து மூணு நாளாச்சின்னு சொல்லும்.

கார் நிறுத்தப்பட்டு, சீனு கீழே இறக்கப்பட்டார்—கார் மீண்டும் புறப்பட்டது.

"எங்கே, வீட்டுக்கா, கிளப்புக்கா?" என்று கேட்டான் மோசஸ்.

"வீட்டுக்குத்தான். ஏண்டா மோசஸ்! உனக்குப் பசங்க எத்தனை?" என்று ஐயர் கேட்டார்.

"மூணு" என்று சுருக்கமாகப் பதிலளித்தான் மோசஸ்.

"மூணு பசங்களுக்குத் தகப்பனாகி இருக்கிறே. சூதாட்டத்தை விடமாட்டேன்கிறயே ஏண்டா, சூதாட்டப் புத்தி இருந்தா எப்படியடா உருப்படமுடியும்?" என்று மறுபடியும் உபதேசம் செய்யலானார். அடிக்கடி மோட்டார் 'ஆரனை' உபயோகப்படுத்தித் தன் கோபத்தை மோசஸ் போக்கிக்கொள்ள முயன்றான். "மோசஸ்! ஒரு விஷயம் கேள். சூதாடி என்னடா சம்பாதிக்க முடியும். இல்லை, பணமே, அதிலே கிடைக்கிறதுன்னே வைச்சுக்கோ, சூதாடிப் பிழைக்கிறது ஒரு பிழைப்பாகுமா—மோசஸ்!........." என்று ஐயர் சூதாட்டத்தின் தீமைகளை மேலும் விவரிக்கலானார். மோசஸ் சலிப்பும் கோபமும் கொண்டவனாய், அவர் வார்த்தைக்கு 'உம்' கொட்டவில்லை. ஐயர், "ஏண்டா மோசஸ்! நான் சொல்றது காதிலே விழுதோயா?" என்று கேட்டார். ஒரு சிரிப்புடன் மோசஸ் சொன்னான், "நான் செவிடனல்ல, நீங்க பேசறது நல்லாக் காதிலே விழுகிறது" என்றான். அவன் கோபித்துக் கொண்டான் என்று ஐயர் தெரிந்துகொண்டார். ஆனால் அவன் கோபத்துக்குக் காரணம் தெரியாது அவருக்கு.

சூதாட்டத்தைக் கண்டிப்பவர், நடத்திய சூதாட்டத்தைப்பற்றி அவரே பெருமையாகச் சீனுவிடம் பேசியதை மோசஸ் கேட்டுக்கொண்டுதானே இருந்தான். அத்தகைய இலாபச் சூதாட்டக்காரர், பொழுதுபோக்காகவும், மனதிலே கொஞ்சம் கிளர்ச்சி வேண்டுமென்றும், சீட்டு ஆடுவதைச் சூதாட்டம் என்றால் அவனுக்குக் கோபம் வராமலிருக்குமா? அவன் செவிடனா, சீனுவும் முத்துசாமி ஐயரும் பேசினது காதில் விழாமலிருக்க! நன்றாகக் கேட்டது. ஆனால் அவன் பேசமுடியாதே! ஊமையல்ல, ஆனால் ஊழியக்காரன்; எப்படி முதல்தரமான சூதாட்டக்காரர், இஸ்பேட்—கிளாவர்—போன்ற சீட்டுகளில் அல்ல, லட்சுமிராஜ்—காமதேனு—காந்தா முதலிய ஷேர்களைச் சீட்டுகளாகக் கொண்ட சூதாட்டக்காரர் என்ற உண்மையை எப்படிப் பேசமுடியும்!

“அவன் கிடக்கிறான், திருட்டுப் பயல்” என்றான், 84.

“செ! என்னடா, அந்த ஆசாமியைப் போய் அப்படித் திட்டுகிறே?” என்று கேட்டான், 63.

“ஏண்டா! என்றுவது, அவன் கோயிலிலே சமாராதனை செய்கிறானே, அந்தச் சமயம், உனக்கும் ஒரு இலை கிடைத்ததுபோலிருக்கு. அதனாலேதான், அந்தத் திருட்டு ஆசாமியைத் தூக்கிவைச்சிகிட்டு ஆடறே” என்று விளக்கமுரைத்தான், 84.

“போடா போ! ஆளைப் பார்த்தாலே நல்லவனென்று தெரிந்துகொள்ளலாம்......”

“கோயிலுக்கு வருகிறபோது பார்த்திருப்பே. டே! அவனைத் தெரிந்துகொள்ளவேணும்னு, கோபுர வாசற்படியண்டை பார்க்கக்கூடாது. அங்கே வருகிறபோது, மூலாம்

2

போட்டுக்கொண்டுதான் வருவான். அவனுடைய நிஜ சொரூபத்தைப் 'பார்க்கவேணும்னு..." 84 பேச்சை முடிப்பதற்குள், வார்டர் வந்துவிடவே, இருவரும், அவர்களுடன் இருந்த வேறு பல நம்பர்களும், தொப்பியைச் சரிப்படுத்திக்கொண்டு, வேலைக்குப் புறப்பட்டனர். எங்கே என்று சொல்லவில்லையே—ஜெயிலில்! 84, கருப்புக் குல்லா; அதாவது பல தடவை ஜெயிலுக்கு வந்தவன் — 63, முதல் தடவை—அதாவது ஜெயிலும் அவனுக்குப் புதிது, ஜெயில் புகவேண்டியதற்கான தொழிலையும் அவன் அவசரத்திலே கற்றுக்கொண்டவன்.

"என்டா! இது எத்தனையாவது தடவை?" என்று மாஜிஸ்ட்ரேட் கேட்டபோது, 84, அதாவது குட்டியப்பன், இலேசாக ஒரு புன்சிரிப்புக் காட்டி, "என்னு எஜமான்! தண்டிக்கிற தொரைக்குத்தானே கணக்குத் தெரியும்!" என்று ஹாஸ்யம்கூடப் பேசினவன். அவ்வளவு 'தேறிய' ஆள்—சிறைப் பறவை! ஆசாமி, கூட்டம் பார்த்து நுழைவது. ஒரு உரசல், "என்னய்யா மாடு மாதிரி மேலே விழுறே" என்ற கேள்வி; இதற்குள் வழிப்போக்கனின் மணிபர்ஸ் மறையும். அந்த வேலையில் அவனுக்குத் தெரிந்த புதுப் புது முறைகள் பல. போலீசாரேகூட, லாக்கப்பில் அவன் இருக்கும்போது, பொழுதுபோக்குக்கு அவனுடைய முறைகளைக் கூறும்படி கேட்டுச் சிரிப்பார்கள். அவனுக்குப் போலீசார் அனைவரும், அடிப்பவர் அடிக்காதவர், இரண்டு ரகமும்—'நாய்னு' தான்—அதாவது, 'என்னு நாய்னு' என்றுதான் கூப்பிடுவான்—அவ்வளவு அன்பு காட்டுவான். அத்தகைய திருட்டுத்தனம் செய்து, கருப்புக் குல்லாக்காரனானவன்; ஊரிலே கவுன்சிலராக, கோயில் தர்மகர்த்தாவாக இருக்கும் ஒருவரைப்பற்றி, வேறோர் திருட்டுக் கேசில் தான்

டைக்கப்பட்ட 'கைதியிடம்', கேவலமாகப் பேசினான், ஜெயிலிலே.

"அவனுடைய நிஜ சொரூபத்தைப் பார்க்கவேண்டுமானால், கோபுர வாசற்படியண்டை பார்க்கக்கூடாது, எங்கே பார்க்கவேணும் தெரியுமா........" அவ்வளவுதான் 63-க்கு அவன் சொன்னது—வார்டர் தடையாக வந்து சேர்ந்தான், இதற்குள்.

'ஜன சகாய நிதி'த் தலைவர் தருமலிங்கம் பிள்ளை, தவியாய்த் தவித்துக்கொண்டிருந்தார், வீட்டிலே. மறுநாள் சர்க்கார் மேலதிகாரி, 'நிதி'யைப் பார்வையிட வருவதாகக் கடிதம் வந்துவிட்டது, நிதியிலே, அடகு வைக்கப்பட்டிருந்த கெம்பு அட்டிகையை, இரவல் கொடுத்துவிட்டிருந்தார்—கலியாண விசேஷத்துக்கு. இன்னும் வரவில்லை—தருமலிங்கம் பிள்ளை தவிக்காமல் எப்படி இருக்கமுடியும்? ஆள் அனுப்பி இருந்தார்—அவனும் ஆமையாகிவிட்டானோ என்னவோ, திரும்பி வரவில்லை. பதைக்கிறார் பிள்ளை; "ஐயா, காலையிலே பத்துமணி சுமாருக்கு வருவதாகச் சொன்னார்—வெற்றிலை பாக்கு தயாராக இருக்கவேண்டும்—இன்னின்னவிதமான சமையல் இருக்கவேண்டும்" என்று ப்யூன் வந்து சொல்லிவிட்டான். தர்மலிங்கம் பிள்ளைக்கு அடிவயிறு கலக்கும், இரவல்தான் கொடுத்தார்—ஆனால் சர்க்கார் ஆபிசரிடம் எப்படிக் கூறமுடியும்? பொதுப் பணத்தைக் கையாண்டார் என்ற குற்றம் சாட்டப்பட்டால்.........நினைக்கும்போதே தர்மலிங்கம் பிள்ளைக்குத் தில்லை, திருப்பதி, திருவரங்கம் போன்ற சகலமும் நாக்கு நுனியிலே வந்து நின்று நர்த்தனமாடின. கையைப் பிசைந்துகொள்கிறார் — பெருமூச்செறிகிறார்—கண்ணீர் விடாதது ஒன்றுதான் பாக்கி.

கற்பகவல்லி, தன் கணவரின் நிலையைப் பார்த்துச்

சிரிக்கலானாள். "என்னங்க கூத்தா இருக்கு! ஏன் இப்படிப் பதறுறிங்க. அட்டிகையைக் கொண்டுவந்து அவரு தராமப் போயிடுவாரா? இல்லே, ஆபீசரிடம் சொன்னா, அவர் என்ன தலையை வாங்கிடுவாரா! இல்லாதப்பட்டவங்களுக்கா இரவல் கொடுத்தோம்? வைர அட்டிகை வீட்டுக்குத்தான், இந்தக் கெப்பு அட்டிகை இரவல் போயிருக்கு. இதுக்கு என்னமோ கலங்கிக்கிட்டு நிக்கிறிங்க" என்று கற்பகம் பேசினாள்.

"சனியனே! உனக்கு என்ன தெரியும். செக்குன்னு தெரியுமா, சிவலிங்கம்னு தெரியுமா; நான் படுகிற வேதனை உனக்கென்ன தெரியும்" என்றார் பிள்ளை. "அதைத்தானே நான் கேட்கிறேன், என் வேதனைப்படணும். வைத்தீஸ்வர முதலியார் வீட்டுக்கு நகையை இரவல் கொடுத்தா, என்ன? அவர் என்ன உங்களை ஏமாத்திவிடுவாரா! வாங்கினதை இல்லேன்னு சொல்கிற மகாராஜனா அவரு" என்று வாதாடினாள். தலை தலை என்று அடித்துக்கொண்டார், தர்மலிங்கம் பிள்ளை. கற்பகத்துக்கு நிதி சம்பந்தமான சட்ட திட்டம் என்ன தெரியும். அது ஒரு காட்டுப்பூச்சி!

"என்னை கற்பகம், என் உயிரை வாங்கறே. ஊரார் நகை அது, பாங்கிலே அடமானம். அதை இரவல் கொடுத்துவிடுவது கூடாது" என்று சிறு குழந்தைக்குப் பாடம் கற்றுக்கொடுப்பதுபோலக் கூறினார். கற்பகமோ, "சரிங்க, அவருக்கு இரவல் கொடுத்தா, அதிலே என்ன ஆபத்து? அவரு என்ன, சொத்துச் சுதந்திரம் இல்லாதவரா?" என்று கேட்டாள். "எல்லாம் இருக்கிறது கற்பகம்—ஒருவேளை......" என்று பயத்தோடு சொன்னார், பிள்ளை. "சிவ! சிவ! மனசாலேகூட அப்படிப்பட்டவங்களைச் சந்தேகிப்பது பாவம்" என்றாள், கற்பகம். "இந்தக் காலத்திலே யாரை நம்பமுடியும் கற்பகம்? எல்லோரும் யோக்யராகவே

இருப்பார்கள்னு சொல்லமுடியுமா?" என்று இழுத்தார். "உலகம் பலவிதமாகத்தாங்க இருக்கும். ஆனா, நம்ம வைத்தீஸ்வர முதலியாருக்கு என்னாங்க, சத்யசந்தர்" என்றாள்.

அந்தச் சத்யசந்தர், மார்பிலே பூசிய சந்தனம் உலர விசிறிக்கொண்டே தர்மலிங்கம் பிள்ளை அனுப்பிய ஆளிடம் சாவதானமாகப் பேசிக்கொண்டிருந்தார். காலா காலத்திலே மழை பெய்யாத கொடுமை, விலைவாசி ஏறிவிட்ட கொடுமை! இப்படிப்பட்ட விஷயங்களை. அவனும் 'ஆமாங்க,' போட்டுப் போட்டு அலுத்துப் போய்விட்டான், "அப்ப நான் புறப்படட்டுங்களா?" என்று கேட்டான். வைத்தீஸ்வரர், "வேடிக்கை! இன்ன ராத்திரி, குன்னக்குடி கோகிலா பாட்டுக் கச்சேரி; அதைக் கேட்காமலா போவது?" என்று கூறி, நிறுத்திவிட்டார். ஊரிலே—இருபது மைலுக்கு அப்பால்—தருமலிங்கம் பதைத்தபடி இருக்கிறார். இங்கே அவரை அனுப்பிவைத்த ஆள் அரைத் தூக்கத்தோடு கச்சேரியில் உட்கார்ந்துகொண்டிருக்கிறார். வைத்தீஸ்வரர், கலியாண வீட்டுக்கு நாலாவது வீட்டிலே அவருக்கென ஏற்படுத்தப்பட்டிருந்த தனி ஜாகையில், யாருடனோ—ஆணுடன் தான்—இரகசியமாக ஏதோ பேசிக்கொண்டிருந்தார்.

* * * *

"அவருடைய நிஜ சொரூபத்தைக் காணவேண்டுமானால் கோபுர வாசற்படி போனால் தெரியாது—அதற்கு வேறு இடம் இருக்கிறது" என்று காலையிலே பேசிய வைதி, இரவு தன் பேச்சைத் தொடர்ந்து நடத்தினான். "கேளடா தம்பி, உலகிலே ரொம்பப் பேர், இடத்துக்கேற்ற வேஷம், ஆளுக்கேற்ற வேஷம் போட்டுக்கொண்டுதான் காரியத்தைச் சாதித்துக்கொள்கிறார்கள்—அந்தப்படி, ஜெயம் பெற முடியாத நாமெல்லாம் ஜெயிலுக்கு வந்து சேருகிறோம். உன்

கண்களுக்கும் அதுபோலவே, ஊரிலே வேறு எவ்வளவோ பேருடைய கண்களுக்கும் பெரிய பக்திமானாக, தர்மிஷ்டராகத் தெரிகிற ஆசாமியின் நிஜ சொரூபம் அவனுடைய தனி அறையிலே சுயநலக் காரியத்துக்காகச் சூது செய்து கொண்டிருக்கும்போதுதான் தெரியும். அங்கே அவன் நரி. யாராவது அவன் விஷயத்திலே குறுக்கிட்டாலோ, அவர்களை அழிப்பதிலே ஈவு இரக்கமின்றி வேலை செய்வான்— புலிபோல. கோபுர வாசற்படியில் அவன் ருத்ராட்சப் பூனை. நீ அவனைப் புதரிலே பதுங்கிக்கொண்டிருக்கும் போது பார்த்ததில்லை; நான் பார்த்திருக்கிறேன்" என்று விவரமாகப் பேசத் தொடங்கினேன்.

"என்ன அது மாயவரம்; விடிய விடியப் பேசுவேபோலிருக்கே" என்று இன்னோர் கைதி கேட்டுக்கொண்டே, இவர்களருகே வந்தான். ஊர்ப் பெயரை, ஆளுக்குப் பொருத்திக் கூப்பிடுவதிலே அவனுக்கோர் ஆசை. "அடடே! மூத்த அண்ணானா! வாண்ணேன்", "தம்பி! இதோ இவருக்குத் தெரியும் அவருடைய யோக்யதை. வேணுமானா கேட்டுப் பாரு" என்றான், 84. "யாருடைய யோக்யதைபற்றியப்பா நீங்க நியாயாதிபதிக நடுராத்திரியிலே பேசிகிட்டு இருக்கிறீங்க" என்று அந்தக் கைதி கேட்டான். "வைத்தீஸ்வர முதலியார் விஷயமாத்தான்" என்றான், 84. "அந்த முழுப்பா சுருட்டி விஷயமா?" என்றான், அந்தக் கைதி. "உங்களுக்குத் தெரியுமா அவர் விஷயம்" என்றான், 63.

"தெரியுமான்னா கேட்கறே? நான் இங்கே வந்ததே, அந்தப் புண்யவானாலேதான். கேள் தம்பி, நான், முதலியார் குடும்பம், சின்ன வயதிலே, படிக்கலை சரியா—பள்ளிக்கூடம் போவேன், வருவேன்—வீட்டிலேயும் அடங்கறதில்லை—வீட்டிலேயும் ஓயாத சண்டை, அப்பாவுக்கும் அம்மாவுக்கும்—

அந்தச் சண்டைதான் எனக்குப் பாஷை கத்துக் கொடுக்கிற பள்ளிக்கூடமாக இருந்தது. ஒரு வேலையும் எனக்குச் சரிப்பட்டு வரவில்லை. எதிர் வீடு பக்கத்து வீடு போவது, சீட்டு ஆடுவது, கதை பேசுவது, இப்படிப் பொழுது போக்குவேன். எதிர் வீட்டிலே, ஒரு ஆச்சாரி நகை செய்வாரு. அங்கே போய் உட்கார்ந்துகொண்டு, அவர் தொழிலைப் பார்த்துக்கொண்டிருப்பதிலே எனக்கு ஒரு பிரியம். இப்படிப் பார்த்து பார்த்து, நான், அந்தத் தொழிலையும் கொஞ்சம் கொஞ்சம் கற்றுக்கொண்டேன், 'உனக்கேப்பா இந்தத் தொழிலு?' என்றுதான் அவர் கேட்பார். 'சும்மா தமாஷுக்குத்தானே' என்று நான் சொல்வேன். உண்மையிலேயே தமாஷ்தான். எனக்கு ஒரு வேலையும் கிடைக்காது குடும்பக் கஷ்டம் ஏற்பட்டபோது ஒரு நினைப்பு வந்தது. ஏன் நாம் அந்தத் தொழிலையே செய்தாத்தான் என்னன்னு. ஆனா, மறு விநாடி அந்த யோசனையை விட்டுவிட்டேன். நாம்ப முதலியார் ஜாதி—நாம்ப போய் இந்தத் தொழிலைச் செய்தா — ஜாதியாரு என்ன எண்ணுவாங்கன்னு விட்டு விட்டேன். இந்தச் சந்தர்ப்பத்திலேதான் வைத்தீஸ்வர முதலியார், எங்க ஊர்க் கோயில் தர்மகர்த்தாவாக ஏற்பட்டார். அவர் எனக்குச் சொந்தக்காரர்கூட. மாமான்னுதான் கூப்பிடுவது. அவர் என்னிடம் திடீரென்று ஆசையாக இருக்கத் தொடங்கினார். எனக்குக் காரணம் தெரியவில்லை அப்போ இப்ப தெரியும். "வைத்தி, தர்மகர்த்தா வேலையைப் பார்த்துவிடுவானா? நான் பார்க்கிறேன், அதை" என்று முன்பு தர்மகர்த்தாவாக இருந்த மோட்டூராரு, மீசையை முறுக்கிக்கொண்டு இருந்தார். அவரிடம் அடி ஆள் உண்டு. அதனாலே, வைத்தீஸ்வர முதலியார் பயந்து போய், என்னைத் துணைக்கு வைத்துக்கொண்டார். நான், இப்ப இருக்கிறமாதிரியா நாறும் நரம்புமாக இருக்கமாட்-

டேன்—அந்தக் கஞ்சாவாலே இப்படியாகிவிட்டேன்—அப்போ ஆள் 'வாட்ட சாட்டமாக' இருப்பேன். என்னைத் துணையாக வைத்துக்கொண்டு, காரியத்தைச் சாதித்துக்கொண்டதோடு விடவில்லை, அந்த வைத்தி. என்னிடம் பேசிப் பேசி, எனக்கு நகை செய்யத் தெரியும் என்கிற விஷயத்தைத் தெரிந்துகொண்டார். உடனே பிளான் போட்டார். கோயிலிலே இருக்கிற முக்கியமான கல்லிழைத்த நகையை எடுத்து வருவாரு—அவருடைய வீட்டிலேயே தனி அறை—நான் அங்கு சாமான்களோடு இருப்பேன்—வைரமா, அதைப் பெயர்த்துவிட்டு, வேறே வெள்ளைக்கல் புதைத்துவிடுவேன்—கோயிலுக்குப் போய்விடும் நகை—வைரம் வைத்திக்கு—நம்ம வேலைக்கும் பணம் கிடைக்கும்—இதுபோல, வைரம், பச்சை, கெம்பு, இப்படி முதலிலே, வேலை தீர்த்தாச்சு—பிறகு தங்க நகையைக் கவனிக்க ஆரம்பிச்சோம். ஏண்டா தம்பி! உனக்கு ஆச்சரியமாக இருக்கா? எப்படி இவ்வளவு தப்புத் தண்டா செய்துவிட்டு, வைத்தி, வெளியே இருக்கிறான், அதிலும் கௌரவமா இருக்கிறான்னு யோசிக்கிறயா! அதுபோல எவ்வளவோ பேர்டா. ஜெயிலுக்குள்ளே தான் திருட்டுப் பயல்கள் இருக்கிறதாக எண்ணாதே. ஜெயிக்காதவன், ஜெயிலிலே! ஜெயித்தவன் சுகத்திலே இருக்கிறான். கேள், கதையை! இப்படி, தர்மகர்த்தா, கோயில் நகையைத் 'தீத்துக் கட்டிகிட்டு' இருந்தாரா? நானும் அதையே பிழைப்பாக்கிக்கிட்டு, கொஞ்சம் சௌக்கியமாகத்தான் இருந்தேன். காசு கையிலே நடமாட ஆரம்பிச்சதும், குடி அதிகமாயிடுத்து—குடி அதிகமாயிடவே, பணம் தேடவேண்டிய அவசியம் வளரலாச்சி—அதனாலே, கையில் நகை வருவது குறையவே—வேறே நகையைத் தேடவேண்டியதாச்சி. வைத்தி, தனக்கு இனிமேல்பட அந்தமாதிரி காரியத்திலே இஷ்டமில்லேன்னு சொல்லிவிட்டான். கனவிலே சாமி வந்து

மிரட்டிச்சின்னு சொன்னான்—விஷயம் அதுவல்ல—சர்க்காரிலே தர்மகர்த்தாவுக்குத் துணையாக மானேஜரை நியமித்துவிட்டதுதான் உண்மையான காரணம். எப்படியோ ஒண்ணு, நான் வேறே இடம் தேடவேண்டியதாச்சி. கொஞ்சநாள் அதிலேயும் வெற்றிதான். உதவிக்கு ஒரு ஆசாமியை வைத்துகிட்டுக் கடையே வைத்துவிட்டேன். உதவிக்கு வந்த ஆள், ஒரு ஆச்சாரி. கடை விலாசம் அவன் பேரில்தான்—எல்லாம் வைத்தி யோசனைதான்.

இப்படி, 'தொழிலை' நடத்தி வந்தபோது, ஒரு கேசிலே சிக்கிக்கிட்டோம்—நல்ல கெம்பு அட்டிகை, அது ரிப்பேருக்கு வந்தது—நாலு கெம்பை நகர்த்திவிட்டு, அதிலே நல்ல இமிடேஷன் கெம்பு வைத்து அழுத்திக் கொடுத்துவிட்டோம்—நம்மப் 'போருத வேலை', அதை அந்த ஆசாமிங்க, ஈடுவைக்க வேண்டி இருந்தது—அதுவும் வைத்தி கிட்டவே தான் போனாங்க—அவரிடம் பேசறபோது, அந்த அட்டிகையை என்னிடம் ரிப்பேர் செய்ததாகச் சொன்னார்களாம். அந்தப் பாவி உடனே சிரித்துக்கொண்டே, "ஓஹோ! நகை அங்கே போய் வந்ததா—இதுமேலே பணம் தரமுடியாது" என்று சொல்லிவிட்டான். சந்தேகமாயிடுத்து அவர்களுக்கு—வேறே இடத்திலே கொடுத்தாங்க—விஷயம் வெளியாயிடுத்து—இதோ நான் இங்கே இருக்கறேன்—கேசிலே மாட்டிகிட்டபோது கெஞ்சி கெஞ்சிப் பார்த்தேன், வைத்தியிடம். ஒரு உதவியும் செய்யவில்லை. என்கூட இருந்த ஆசாமிக்குத் தண்டனை முடிந்து வெளியே போய்விட்டான். நான் போக இன்னும் ஒன்பது நாளிருக்கு. வைத்தீஸ்வர முதலியாருன்னு பேர் இருக்கு, அந்தத் திருட்டு ஆசாமிக்கு. வெளியே போய் என்ன செய்யப்போகிறேன்னு தெரியாது அவனுக்கு. கோயில் நகை விஷயமாக, அம்பலப்படுத்தி

விட்டு மறுவேலை பார்க்கிறேன். என்கூட இருந்த ஆசாமி, இப்ப வெளியே போயிருக்கிறானே, அவனிடம்கூடச் சொல்லியனுப்பி இருக்கிறேன்—டே! கண்ணு! ஜாக்கிரதையாகக் கவனிச்சிக்கிட்டே இரு, அந்த ஆசாமியை. வெளியே வந்ததும் அவனைத் தீர்த்துப்போடணும், என்று உஷார் படுத்தித்தான் அனுப்பி இருக்கிறேன். அப்படிப்பட்ட திருட்டு ஆசாமி—கோயில் சொத்தைக் கொள்ளை அடிச்சவன்—முழுப்பா சுருட்டியாச்சே, வைத்தீஸ்வரன். அவன் வெளியிலே இருக்கறதாலேயே, அவன் யோக்யன்னு எண்ணிடாதே. எனக்கு இந்தத் திருட்டுத் தொழிலைப் பழக்கமாக்கியதே, அவன்தான். அதனாலே அவன் இலாபம் அடைந்து பெரிய மனுஷ்யனாயிட்டான்; நான் ஜெயிலிலே இருக்கிறேன். தம்பி! சொத்து, நகை, பணம், காசு இதெல்லாம் பேச ஆரம்பிச்சா தெரியும், ஜெயிலுக்கு வெளியே எவ்வளவோ கள்ளனுங்க இருக்கிற சூட்சமம்'' என்று அந்தக் கைதி கூறினான்.

“கேட்டுக்கிட்டயா 63. அப்படிப்பட்ட வைத்தீஸ்வரனை, நீ வேஷத்தைப் பார்த்துவிட்டுப் பெரிய மனுஷன்னு சொல்லறே, விவரம் தெரிந்துகொள்ளாமே. மாயவரத்துக்கு அடிக்கடி வருவான், இந்த வைத்தீஸ்வரன். அங்கேதான் எனக்கு இவன் யோக்யதை தெரிந்தது. ஒரு ஓட்டலிலே ரூம் எடுத்துக்கொண்டு அதிலே இருந்தான். நான் அந்தச் சமயத்திலே, ஓட்டல் பக்கம் போய்வருகிற வழக்கம்—அங்கே கொஞ்சம் சௌகரியமாகச் சாமான்கள் கிடைத்து வந்தது. ஒருநாள் இவன் ரூமுக்குள்ளே நுழைஞ்சேன்—இவன் கீழே குளிக்கப் போயிருந்தான்—உள்ளே போய்ப் பார்க்கிறேன்—ஒரு பெட்டி நிறைய 'அபின்' அடைச்சி வைச்சிருக்கு. அபினியைப் பெட்டியிலே போட்டு அடைச்சி

அதுமேலே ஒரு தட்டுப் போட்டு மூடி, அந்தத் தட்டு மேலே, அத்தர் பாட்டில் வைத்திருக்கிறான். அத்தர் வியாபாரம் செய்கிறதாகப் பாசாங்கு. பார்த்தேன்; வெளியே போகவில்லை. சரி! இவனை ஒரு கை பார்த்துவிடுவது என்று தீர்மானித்து, அங்கேயே கட்டில்மேலே உட்கார்ந்து விட்டேன். ஆசாமி வந்தான்—கதவைச் சாத்தி வைத்திருந்தேனல்லவா—பூட்டி இல்லாமல் போகவே, பதறிப்போனான்—கதவைத் திறந்து உள்ளே வந்தான்—என்னைப் பார்த்தான், ஒரே அலறல்—"ஸ்! கூச்சல் போடாதேய்யா; கதவைச் சாத்திவிட்டு உட்காரு. அத்தர் வாங்க வந்திருக்கிறேன்" என்றுமெதுவாகச் சொன்னேன். ஆசாமி மிரண்டு போனான்.

"சரியான ஆசாமிதான்யா நீ, அத்தர் கீழே அபினி—அபினி மேலே அத்தர்—என்ன ஜோரா ஏற்பாடு செய்து இட்டே" என்று கேலியாகப் பேசினேன். அவனும் பல்லை இளித்துக்கொண்டு, "நீங்க...யாருங்...கோ....எப்படி...." என்று பேசலானான். போலீசா? என்றான். இல்லை என்றேன். முகத்திலே இருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டான். பிறகு பேரம் நடந்தது—இருநூறு ரூபா கிடைத்தது. நானும் அவனும் சினேகிதரானோம். இரண்டு மூன்று நாள்—அதற்குள்ளே அபின் விற்கப்பட்டாகிவிட்டது—பாராரோ ஆசாமி இவனுக்கு ஏஜண்டுகள்—ஊருக்குப் புறப்படும்போது, அவனுக்கு ஒரு பயம்—நான் கூட வருகிறேனோ என்று—நான் இவனுடைய விலாசம் யாவும் விசாரித்துக்கொண்டால், அவ்வப்போது மிரட்டலாமே என்று ஆசைப்பட்டேன். ஆகவே, அவன் எனக்குத் தெரியாமலே ஊருக்குக் கிளம்பப் பிளான் போட்டான். ஓட்டலிலே இவனுக்குப் பெயர், அத்தர் வியாபாரம் ஆறுமுகம் பிள்ளை—

என்னிடமும் அதே பேரைத்தான் சொன்னான், இவன் துணியிலே பார்த்தா, 'V' என்று குறி இருந்தது—எனக்குச் சந்தேகம்—இவனை விடக்கூடாது, பின் தொடரவேண்டும் என்று எண்ணம். இரயிலிலே ஏறிக்கொண்டான், செகண்டு கிளாசிலே. ஆரஞ்சு தருகிறான், ஆப்பிள் தருகிறான், எனக்கு. ஆனா, கூடமட்டும் வரவிடவில்லை. வண்டி புறப்பட்டது—நான் விடை பெற்றுக்கொண்டேன்—ஆசாமி, நான் தொலைந்தேன் என்று சந்தோஷப்பட்டிருப்பான்—நானா இவனுக்கு ஏமாறுகிறவன்—நம்ம பொடிப்பயல் ஒருவனை முன்னேற்பாடாக அனுப்பி இருந்தேன், தகவல் விசாரித்து வர—பயல் இரண்டு நாள் கழித்து வந்து என்னிடம் சொன்னான், தகவலை. "அவர் பேர் வைத்திலிங்க முதலியாரு; ஊரிலே அவருக்கு நல்லவருன்னு பேரு! எல்லோரும் அவரிடம் மரியாதை காட்டுகிறார்கள். கோயிலுக்கு அவர் தர்மகர்த்தா" என்றெல்லாம் கூறினான். அத்தர் ஆறுமுக முதலியாக வேஷம் போட்ட ஆசாமியைப் போலீசிலே சிக்கிவிடலாம்னுகூட நினைச்சேன்—சிக்கிவிட்டா நமக்கு ஒரு இலாபமும் இல்லை—சரி கிடைத்தவரைக்கும் அவனிடமே கறைப்பது என்று எண்ணி இரண்டொரு மாதம் காத்துக்கொண்டிருந்தேன்—ஆசாமி மாயவரம் பக்கம் தலை காட்டவே இல்லை—எஜண்டுகளுக்குக் கடிதம் போட்டு இடம் வேறு ஏற்பாடு செய்துகொண்டான்போலிருக்கு. கடைசியிலே ஊருக்கே போய், நேரடியாகவே பார்த்துவிட்டு வருவதுன்னு போனேன்—பார்த்தேன்—கோயிலிலே கும்பிடு போட்டேன், "யார்? எந்த ஊர்?" என்று கேட்க ஆரம்பித்தான்—அத்தர் ஆறுமுக முதலியார் என்று பெயரைக் கவனப்படுத்தினேன். "யாரடா இவன், ஆள் மாறாட்டமாப் பேசுகிறான்" என்று முறைப்பாகப் பேசினான்-இதற்குள்ளே

கோயில் சேவகர்கள் வந்து சூழ்ந்துகொண்டார்கள், என்னை அடித்துவிட்டார்கள் — கூவினேன். கொக்கரித்தேன், போலீஸ்காரரிடம்கூடச் சொன்னேன், இந்த ஆசாமி அபின் வியாபாரம் செய்கிறான் என்று. நான்தான் லாக்கப்பில் தள்ளப்பட்டேன். இதற்குள் போலீசார் என்னைப்பற்றித் தகவல் விசாரித்துவிட்டனர். மாயவரம் போலீசார் நான் 'முன்னாலே ஜெயிலுக்குப் போய்வந்தவன்'' என்று தகவல் கொடுக்கவே, கோபுர வாசற்படி அருகே, தர்மகர்த்தா வைத்தீஸ்வர முதலியார் மடியிலிருந்து பணப்பையைப் பிடுங்க முயற்சித்ததாகக் கேஸ் போட்டார்கள்— தண்டனையும் தந்தார்கள். அப்படிப்பட்ட வைத்தீஸ்வரனை அவன் நம்மோடு ஜெயிலிலே இல்லாத காரணத்தாலேயே, பெரிய யோக்யன் என்று பேசுகிறாயே'' என்று 84 கூறினான்.

63 ஒரு நீண்ட பெருமூச்செறிந்து, "இப்படியா இருக்கு விஷயம். நான், ஏழைகள், இல்லாதவர்கள், கெட்டுப்போனவர்கள்மட்டுந்தான் திருடுகிறார்கள் என்று நினைத்தேன். நானும் திருடிவிட்டு ஜெயிலுக்கு வந்தவன்தான். ஆனால், என் கஷ்டகாலம் எனக்கு அப்படிப்பட்ட புத்தியைக் கொடுத்தது. நான் இந்த வைத்தீஸ்வர முதலியாரைப் பார்க்கிறபோதெல்லாம், அடடா! எவ்வளவு பெரிய மனுஷராக இருக்கிறார். இப்படி அல்லவா இருக்கவேண்டும். நாமோ திருட்டுப் பயலானோமே என்றெண்ணி வருத்தப்படுவது வழக்கம். நீங்கள் சொன்னதைக் கேட்டா, இந்த ஆசாமி, மகா மோசக்காரனாக அல்லவா இருப்பதாகத் தெரியுது'' என்று கூறி ஆயாசப்பட்டான்.

* * *

"விடிவதற்குள்ளே முடியாதுபோலிருக்குங்களே, என்னா, இப்பல்லாம், முந்தியாட்டம் வேலை முடியறதில்

லேங்க. ஜெயிலிலே போடறான் பாருங்கோ, அந்தக் கீரைக் குழம்பு, அது இரத்தத்தை உறிஞ்சி எடுத்துவிடுதுங்கோ. நீங்களே பாருங்களேன், உடம்பு எனக்குத் துரும்பு துரும்பா இளைச்சித்தானே போச்சிங்க" என்று பேசிக் கொண்டே, கெம்பு அட்டிகையின் கற்களைப் பெயர்த்தெடுத்துக்கொண்டே இருந்தான், கண்ணுச்சாமி. வைத்தீஸ்வர முதலியார் "வெறும் கீரையா? சோறு அளவுகூடச் சரியாக இருக்காதா?" என்றெல்லாம் அவனிடம் பேச்சுக் கொடுத்துக்கொண்டே. வேலை வாங்கிக்கொண்டிருந்தார்.

வெளியே கச்சேரியில், குன்னக்குடி கோகிலம், முதலியாரை ஒரு வார்த்தை கேட்டுவிட்டு, மங்களம் பாடலாம் என்று யோசித்தபடி, திருப்புகழிலிருந்து காவடிச்சிந்து, அதிலிருந்து தில்லானா தெம்மாங்கு இப்படிப் பிரயாணம் செய்துகொண்டிருந்தாள். தர்மலிங்கம் பிள்ளை அனுப்பிய ஆள், கோகிலாவின் கண்களில் உள்ள மை கரைந்து போனதைப் பக்கத்திலே இருப்பவருக்குக் காட்டிக்கொண்டிருந்தான்.

வைத்தீஸ்வர முதலியார் ஆறு இமிடேஷன் கெம்புக் கற்களை எடுத்துக்கொடுத்தார், கண்ணுச்சாமியிடம். பழைய கற்கள் முதலியார் மடியில் போய்விட்டன. புதுக் கற்கள் அட்டிகையில் குடி ஏறிவிட்டன.

* * * *

விடிந்தது. தர்மலிங்கத்தின் ஆளிடம் அட்டிகையைக் கொடுத்து அனுப்பினார், வைத்தீஸ்வரர். கிராமத்தார், "கலியாணமென்றால் இது கலியாணம்—கச்சேரி என்றால் இப்படி இருக்கவேண்டும் — முதலியார் குணம்போல யாருக்கு வரும்—அவரே குடும்பத்தோடு வந்திருந்து, தன்

சமையற்காரனுக்குத் தானே பெண் பார்த்து, தானே பணம் செலவுசெய்து கலியாணம் செய்துவைத்தார்—எவ்வளவு நல்ல மனம் இருக்கவேண்டும். இப்படிப்பட்டவர்கள் சௌக்யமாக நூறு யுகம் வாழவேண்டும்" என்று பேசிக் கொண்டனர்.

பல் விளக்கிக்கொண்டே, கலியாணப் பெண்ணின் தாயாரிடம் வைத்தீஸ்வரர் பரிகாசம் பேசிக்கொண்டிருக்கிறார், "ஏன் பார்வதி! நான்மட்டும் எப்போதும் சிநேகிதத்தை மறக்கமாட்டேன் என்கிற விஷயம் இப்பவாவது புரிஞ்சுதா? பார் உன் மகளுக்கு எல்லாச் சீரும் சிறப்பும் நான் கிட்ட இருந்து செய்கிறேன்—நீ கவலைப்படாதேன்னு அன்று சொன்னதை நிறைவேற்றி வைத்தேனா இல்லையா, பார்" என்றார்.

"அது சரிங்க. அவ விஷயமாக உங்களுக்கு இல்லாத அக்கறை, வேறே யாருக்கு இருக்கமுடியுமுங்க. நீங்க சத்ய சந்தரு—சொன்ன வாக்கியத்தைக் காப்பாத்தினிங்க" என்று நன்றி கூறினாள்.

* * * *

"எழுந்திருடா மாயவரம்! ஏது நேத்து இராத்திரி, சத்யசந்தன் காலட்சேபத்தைச்செய்து கூளித்துப்போச்சி போலிருக்கு. எழுந்திரு, எழுந்திரு—வமாந்தவன் ஜெயிலிலே, ஏய்த்துவிட்டவன் வெளியிலே" என்று கூறினான், முத்து.

---

# அவள் விபசாரியானாள்!

"என்னடி அது, கூட்டுகிற சத்தத்தைக் காணோம்?"

"இதோ, பெருக்கிக்கிட்டுத்தானேம்மா இருக்கிறேன். பீரோக் கண்ணாடியைத் துடைச்சேன்."

"கண்ணாடியைத் துடைச்சாயா, கண்ணாடியை. கண்ணாடி எதிரே நின்றுகொண்டு, அழகைப் பார்த்துகிட்டே போயிருக்கு. வர வர உனக்கு 'ராங்கி' அதிகமாகுதடி, நண்டு."

* * * *

'நண்டு' என்று அழைக்கப்பட்ட வேலைக்காரியின் பெயர், மீனாட்சி. வேலைக்கு வந்த அன்று, "என்னடி பெயர்" என்று எஜமானி கேட்டபோது, "மீனுவுங்க" என்று பணிவுடன் பதில் சொன்னாள், வேலைக்காரி. "மீனும் நண்டும்" என்று கூறிக்கொண்டே மின்னல்கொடியாள்

சிரித்தாள்—மீனுவுக்குத் தெரியுமா, அந்தச் சிரிப்பு எவ்வளவு அழுத்தக்காரர்களின் பெட்டிகளை எல்லாம், திறந்திருக்கிறது என்று. அவள் மரம்போல நின்றாள். அன்று முதல் மின்னல்கொடியாள், மீனுவை நண்டு ஆக்கினாள்.

அன்று மின்னல்கொடியாளுக்குப் பிரத்யேகமான சந்தோஷம். ஜமீன் குடிகளின் பாதுகாப்புச் சங்கத் தலைவர் ஜெயச்சந்திரர், மின்னல்கொடியாளின், 'முதலியாரிடம்' ஒரு பந்தயம் கட்டினார்—அதாவது, முதலியாருக்கு ஆண் குழந்தை பிறக்குமென்று—இல்லை, பெண்தான் என்று முதலியார் கூறினார்—'ஆண்' என்றார் ஜெயச்சந்திரர் — பந்தயம் என்ன? என்று மின்னல்கொடி கேட்டாள்—ஒரு வைரத் திருகு பில்லை—உனக்கு என்றார், ஜெயச்சந்திரர்.

ஒரு வாரத்திற்கெல்லாம், 'முதலியாருக்கு' பெண் குழந்தை பிறந்தது. (வீட்டில் முதலியாரின் மனைவிக்கு) ஜெயச்சந்திரர் தோற்றார்—அதற்காக அவர் வருத்தப்படவில்லை—வைரத் திருகுபில்லையைத் தினம் தினம் மின்னல்கொடி தொடுவாளல்லவா, அது, அவருடைய இருதயத்தை அவள் பிரதிதினமும் தடவிக் கொடுப்பதற்குச் சமானம் என்று அவர் எண்ணிக்கொண்டார். கொஞ்சம் முந்திக் கொண்டதால் அவள் முதலியாரின் பொருளாகிவிட்டாள், இல்லாவிட்டால் ஜெயச்சந்திரர்தான்......

மின்னல்கொடியாளுக்காகப் போட்டியிட்டவர்கள் பலர்—ஏழாவது கீர்த்தனை முடிவதற்குள் பாட்டு வாத்தியாருக்கும் பக்க வாத்தியக்காரருக்குமே பலமான போட்டி—சங்கீத விஷயமாக அல்ல—மின்னல்கொடியாள் விஷயமாகத்தான்!

ஒருமுறை மின்னல், தாளம் தவறிவிட்டாள்—பாட்டு

வாத்தியாருக்கு, அது ஓர் அற்புதமான சந்தர்ப்பமாக அமைந்துவிட்டது.

தக்க தக்கிட்டா, தக்க தக்கிட்டா என்று உச்சரித்த படி, கிட்டிகை போட்டுக் காட்டினார்—பிறகு—மின்னலின் 'துடையிலே, அவரே அந்தத் தாளத்தைப் போட்டுக் காட்டினார், பாட்டு வாத்தியாருடன் ஒவ்வொரு நாளும் தவறாமல் வந்து மின்னலின் கீதப் பயிற்சியைக் கவனித்து வந்த, பிடில் முத்தையாவுக்குப் பிரமாதமான கோபம். "எப்படி யய்யா, மின்னல்கொடியாளைத் தொட்டுத் தாளம் போட்டுக் காட்டலாம். ஏன், சொன்னால் போதாதா?" என்று கேட்க முடியுமா! தாளத்தின்மீதே பாய்ந்தார்—அதாவது பாட்டு வாத்தியாரின் தாள ஞானத்தையே குறை கூற ஆரம்பித்தார்—"உம்மிடம் எப்போதும் தாளம் சரியாக இருப்பதில்லை" என்றார். "அட அபசாரமே! நீயா என்னுடைய ஞானத்தைக் குறை கூற வந்துவிட்டாய்? என்று பாட்டு வாத்தியார் கண்டித்தார். "ஏனய்யா? உங்க ரெண்டு பேருடைய வித்துவத்தைப்பற்றி விவாதித்துக்கொள்ள என் வீடுதானா இடம்? இதற்குத்தானா மாதம் பதினைந்து" என்று மின்னலின் தாயார் முருகாயி கூறிய பிறகுதான், தாளச் சண்டை ஓய்ந்தது. இப்படிப் பலருக்குள், போட்டியை, சண்டையை மூட்டிவிட்ட மோகனச் சிரிப்புக்காரி, அந்த மின்னல்கொடியாள்.

ஜெயச்சந்திரர் 'பரிசாக'க் கொடுத்த வைரத் திருகு பில்லையை வைத்துக்கொண்டு, 'கூடத்திலே', ஜவ்வாது பொட்டைச் சரி பார்த்துக்கொண்டிருந்த சமயம் அது. படுக்கையறையைக் கூட்டப்போன மீனா, நிலக்கண்ணாடி முன் நின்றுகொண்டிருந்தாள், இரண்டோர் நிமிஷம். கூட்டும் சப்தம் கேளாதுபோகவே தான், மின்னல், 'கண்டு'வைக் கூப்

யிட்டாள். கூப்பிட்டு, "அழகைப் பார்த்துக்கொள்கிறாயா?" என்று கேட்டாள். "இல்லை" என்று சொன்னாள், மீனா. அது, உண்மை, பொய் இரண்டும் கலந்த பேச்சு—மீனா கண்ணாடியைத் துடைக்கவில்லை—பார்த்துக்கொண்டுதான் இருந்தாள்—ஆனால், அவள் தன் அழகைப் பார்த்துக்கொள்ளவில்லை — நெற்றியிலே இருந்த 'வீக்கத்தை' பார்த்துக் கொண்டாள். அவளுக்குக் கிடைத்த பரிசு அது!

அவள் கணவன் 'கோழிச் சண்டை' விடுபவன்—எத்தனையோ விதமான தொழில்செய்து பார்த்துக் கடைசியில், அவன் இந்தத் தொழிலைக் கண்டுபிடித்தான். ஒவ்வொரு நாளும், பள்ளிக்கூடத்துக்கு முன்புறம் 'கோழிச் சண்டை' விடுவான்—காசு திரட்டுவான்—பந்தயம்கூடக் கட்டுவார்கள், சிலர். கோழி, மிலிடரி ஓட்டல் சின்னான் 'வாடகைக்குத் தந்து வந்தான்—அதாவது, வாரத்துக்கு ஒரு ஜதைகோழி தருவான்—எப்படியோ பாடுபட்டு, அந்தக் கோழிகளுக்குச் சண்டைபோடக் கற்றுக்கொடுத்துவிடுவான், கொண்டான். 'கொண்டைய நாயுடு' என்று கையிலே, பெரிய எழுத்திலே 'பச்சை' குத்திக்கொண்டுதான் இருந்தான்—ஆனால், ஊரார் அவனைக் கொண்டான் என்றுதான் அழைப்பார்கள்—கோழிக்கும் சண்டை போடும் திறமை வரும், ஞாயிற்றுக் கிழமையும் வந்துவிடும்—அன்று, ஸ்பெஷல் கோழிப்புலவு தயாராகிவிடும்—புதிய கோழிகள் கொடுப்பான் சின்னான் திங்கட்கிழமை. இப்படியே, கோழிகள் மாறிக்கொண்டே இருக்கும்—கோழிகளின் திறமைக்குத் தக்கபடி, கொண்டானுடைய போதை. ஒரு நாளைக்குச் சைனாபஜார் அழைத்துச் செல்வதாக இருக்கும், ஒரு நாளைக்கு எறும்பு கடித்த மாதிரிமட்டுமே இருக்கும். இந்தப் போதையின் அளவிலே அவன் அக்கறை காட்டி வந்ததால், கோழி வாடகைக்குப்

பெறுவதைவிடச் சொந்தத்திலே வாங்கிவிடலாமே என்று எண்ணம் பிறக்கவில்லை. பிறந்தாலும், 'மாலையிலே அந்தச் சோலையிலே உள்ள மயக்க மருந்து' அந்த எண்ணத்தைக் கொன்றுவிடும்.

வாடகைப் பணத்தைச் சரியாகச் சிலசமயம் கொடுக்க மாட்டான், கொண்டான். சின்னான் சிறுவான். கொண்டான் கெஞ்சிப் பழக்கமில்லாதவன். எனவே, கோபமாகவே வீட்டுக்கு வருவான்—மிகக் கஷ்டப்பட்டு விஷயத்தைத் தெரிந்துகொள்வாள்—மீனா. பிறகு, அந்த மில்டரி ஓட்டல் 'அண்ணனை'ப் பார்த்து, நல்லதனமாகப் பேசி, கோழிகளைக் கொடுக்கும்படி சொல்வாள். அவனும் கொடுப்பான். மீனாவின் நடை நொடி பாவனை, முகவெட்டு எல்லாம் சின்னானுக்குப் பிடித்திருந்தது—ஆனால், 'அண்ணேன்' என்று அவள் கூப்பிடும்போதுமட்டும் அவனுக்குக் கண்ணில் 'சால்னா'த் துளி விழுந்தமாதிரி எரியும். 'அண்ணே' என்று மீனா சொன்ன உடனே சின்னான், "ஏண்டிம்மா தங்கச்சி!" என்று கேலியாகப் பதிலளிப்பான். முன் வார்த்தை தூது, பின்னால் வரும் வார்த்தைகள் சும்மா ஒப்புக்குக் கூறுவது, என்பது அவன் எண்ணம். மீனாவுக்கு அவனுடைய போக்குப் புரியாமல் போகவில்லை. ஆனால், கொண்டானுக்குத் துரோகம் செய்ய அவள் மனம் ஒப்புவதில்லை. கோழி வாங்கிப் போக வரும்போது, ஒரு கப் 'சாயா'வும் சின்னான் தருவான். "அண்ணே! அவருக்கு ஒரு ஜதை கோழியை விலைக்கேதான் வாங்கிக் கொடேன்; நீதான், பகவான் புண்யத்தாலே நல்லா சம்பாதிக்கிறயே, இந்த உபகாரம் செய்யறதானேண்ணேன்" என்று மீனா கேட்பாள். சின்னான், பரம திருப்தி அடைவான்—'ஆவட்டும் தங்கச்சி செய்வோம்! எனக்கும் ரொம்ப நாளா மனசிலே எண்ணம் உண்டு.

வேலை வரவேணுமில்லெ எதுக்கும்" என்று கூறுவான். மீனா, அவன் எதற்கு வேலை தேடுகிறான் என்பதை புரிந்து கொள்ளாமலில்லை. அவளுடைய எண்ணமெல்லாம் எப்படியோ தட்டிக் கொடுத்துக்கொண்டே சின்னானுடைய உதவியைப் பெற்றுத் தன் புருஷனை ஒரு வழிக்குக் கொண்டு வரவேண்டும் என்பதுதான். சின்னானின் நோக்கம் வெளிப்படையாகத் தெரிகிறது—இஷ்டமில்லை—அத்தகைய சுபாவக்காரி அல்ல—ஆனாலும், அவனிடம் சண்டை போட்டுக் கொள்ளவும் இஷ்டமில்லை-என்னமோ ஒழிந்துபோகிறான்—நம்வரையில் நாம் ஜாக்ரதையாக இருப்போம் — என்று அவள், பாபம், எண்ணிக்கொண்டிருந்தாள்.

மின்னல்கொடியாளுக்குப் பரிசு கிடைத்த அன்றுதான், வழக்கத்துக்கு மாறாகச் சின்னான், கோழி கேட்கவந்த மீனாவை, "தங்கச்சி! நல்ல சமயத்திலே வந்தே, வா வா" என்று அழைத்தான். கபீலென்று இருந்தது மீனாவுக்கு, முகம் ஒருவிதமாகிவிட்டது. இருந்தாலும் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, "என்னாண்ணே, அவ்வளவு அக்கரையாக என்னைத் தேடின காரணம்?" என்று கேட்டாள்.

'தா! இத பாரு மீனா! நான் எப்பவும் மனுஷாளை மறக்கற வழக்கம் கிடையாது" என்று பொதுவான தத்துவம் பேசினான், சின்னான்.

இவ்வளவும் கடையின் தாழ்வாரத்தில் நடக்கிறது.

கடை அமைப்பே, அவளுக்கு அன்றுதான் கொஞ்சம் பயம் தந்தது. தாழ்வாரத்துக்கும், உள்ளே சாப்பிட்டுக் கொண்டிருப்பவர்களுக்கும், கொஞ்சம் தூரம் இருந்தது—ஒருவருக்கொருவர் தெரிய முடியாது; குறுக்கே இருந்த

சுவரை எடுக்கும் விஷயமாக, கட்டிடக்காரருக்கும் சின்னானுக்கும் தகராறு.

"கொஞ்சம் மாவு இடிக்கவேணும் மீனா, ஆள் வரவில்லை" என்று 'சேதி'யை ஆரம்பித்தான், சின்னான்.

உண்மையாகவேதான் அரிசியை ஆள் கொண்டுவந்து கொடுத்தான் — மகிழ்ச்சியாகவே, மீனா மா இடித்துக் கொண்டிருந்தாள். ஓட்டலில் கூட்டம் குறைந்தது. குடும்பக்காரராக இருந்த இரண்டோர் ஆட்களை கடை வீதிக்கு வேறு வேலையாக அனுப்பிவிட்டான். சின்னான், முஸ்தீப்பு செய்துகொண்டு, 'கல்லா'வில் வேறு ஆளை உட்கார வைத்துவிட்டு, மாவிடிக்கும் இடம் சென்றான். அவன் வந்த பிறகு தான், அந்த இடமும் ஒரு குகைபோல இருப்பது தெரிந்தது, மீனாவுக்கு. கொஞ்சம் பயந்தாள். சின்னான், அவளருகே சென்று கொஞ்சநேரம் நின்றுகொண்டிருந்தான். அவளும் அவனைக் கவனிக்காதவள்போலவே மாவிடித்துக் கொண்டிருந்தாள். போர் தொடுத்துவிடுவது என்று சின்னான் தீர்மானித்து, "தா!ஏன் இப்படி அவசர அவசரமாக வேலை செய்யணும். கஷ்டமா இருக்குமே" என்று கூறிக் கொண்டே அவள் கரத்தைப் பிடித்தான். அவன் எப்போதுமே பார்த்ததில்லை, அப்படிப்பட்ட பரிதாபமான பார்வையை. மீனா கோபிக்கவில்லை, பதறவில்லை, பரிதாபம் கப்பிய முகத்துடன் அவனைப் பார்த்து, "அண்ணே! வேண்டாம் அண்ணேன், அதெல்லாம் வேண்டாம்; உனக்குக் கோடி புண்யம் உண்டு" என்று சொன்னாள். அவளுடைய ஒவ்வொரு வார்த்தையிலும் தோய்ந்துவந்த சோகம், அவனைச் செயலற்றவனாக்கிவிட்டது. அவளும் மௌனமானாள்! அவனும் செயலற்று நின்றான். அவள் முகம் கடுகடுத்துக் கொள்ளவில்லை—ஆனால் தாயிடம் மன்றாடும் குழந்தையின்

முகமாக இருந்தது, மீனாவின் முகம். சிரிப்பதுபோலக் கூடக் காணப்பட்டாள்—அதாவது பற்கள் வெளியே தெரிந்தன—முகத்திலே மலர்ச்சி இல்லை. சின்னான் தோல்வியை சமாளித்துக்கொண்டு, "சரி! சரி! வேலை நடக்கட்டும்" என்று கூறிக்கொண்டே, அவளை அவசரமாக ஒரு முத்தமிட்டான். ஐயோ! கர்மமே!! என்று—அவள் கூச்சலிடவில்லை—கழுத்து நெரிக்கப்பட்டால் சிறு குழந்தை அழுமே, அதுபோலச் சொல்லிக்கொண்டே அவன் பிடியிலிருந்து விலகினாள், வேகமாக. அந்த வேகத்திலே எதிரிலிருந்த சுவரிலே மோதிக் கொண்டான்! நெற்றியில் சிறிது காயம்—வீக்கம். சின்னான் சரேலென அந்த இடத்தைவிட்டுப் போய்விட்டான்—வழக்கமாக உட்காரும் இடத்தில் சென்று சோகமாக உட்கார்ந்து கொண்டான். அவள் மா இடித்துவிட்டு, அதனை ஒழுங்காகத் தட்டிலே கொட்டி ஓட்டல் ஆளிடம் கொடுத்துவிட்டு, வீடு வந்தாள். வரும்போது அவளும் சின்னானிடம் ஒன்றும் பேசவில்லை—சின்னானும் அவளைக் கவனிக்காததுபோலிருந்து விட்டான். கோழிகளை மட்டும் ஓட்டல் ஆள் கொடுத்தான்.

அந்த நெற்றி வீக்கத்தைத்தான்; மீனா, மின்னல்கொடியாளின் படுக்கையறைக் கண்ணாடி முன்பு நின்று, பார்த்துக் கொண்டாள்.

ஆண்களின் காமாந்தகாரத்தைத் தனக்குச் சாதகமாக் கொண்டு, அவள்—மின்னல்கொடியாள் வைரத் திருகுபில்லையின் வனப்பைப் பார்த்துக்கொண்டிருந்தாள். வறுமையினால் தாக்கப்பட்ட மீனா, ஆணின் காமத்துக்குப் பலியாகவில்லை—ஆனால், நெற்றித் தழும்பு, அவளுடைய வெற்றியைக் காட்டும் குறியாக இருந்தது. தழும்பைத் தடவிப் பார்த்துக்கொண்டிருந்தபோது அந்தத் தரித்திரத்தால் தாக்குண்ட தையலின் மனதிலே, எவ்வளவு கொதிப்போ!

75930

யார் கண்டார்கள்!! எத்தனை ஏழைகளுக்கு இத்தகைய 'தழும்பு'களோ! யார் கூறமுடியும்?

* * * *

நாலு வருஷங்களாகிவிட்டன. நானாவிதமான மாறுதல்கள். கொண்டான், சிறை சென்றுவிட்டான். சின்னான் பெரிய ஓட்டல்காரனாகிவிட்டான்—குடி வகையும் கொடுத்து வாடிக்கைக்காரரைப் பெருக்கிக்கொண்டு. 'முதலியாரை' தேர்தல் சுரண்டிவிட்டது. ஜெயச்சந்திரருக்குத் தோல்வியும் தேய்பிறையும்; சொத்தில், செல்வாக்கில் சகலத்திலும். மின்னல்கொடியாளிடம், மீனா பணிப்பெண் அல்ல, ஓட்டல் முதலாளி சின்னானின் 'வைப்பு'. குதிரை வண்டியில் வந்து இறங்குகிறாள், மின்னல் வீட்டுக்கு. "வாடியம்மா மீனா" என்று வரவேற்கிறாள், மின்னல். "என்ன அக்கா உடம்புக்கு?" என்று விசாரிக்கிறாள், மீனா. பழைய பீரோவும்—நிலக்கண்ணாடியும் இல்லை. மீனாவின் நெற்றியின் திலகம் கொஞ்சம் கலைந்திருக்கிறது. மின்னல், அதனைச் சரி செய்துவிடுகிறாள்; அவள் கையில் அந்தத் தழும்பு தென்படவில்லை. நாலு ஆண்டுகள் ஆகிவிட்டன அல்லவா! மேலும், மீனாவின் தழும்பு நெற்றியிலிருந்து மறைந்து இருதயத்தில் பதிந்துவிட்டது. அவள் விபசாரியாகிவிட்டாள்! அக்காவுக்கு மற்றோர் தங்கை! ஆண்களின் காமப் பசிக்கு மற்றோர் இரை. சமுதாயத்துக்கு மற்றோர் சனியன், வறுமையில் புழுத்த புழு!

# நாடோடி

"நாடோடிப் பயல்—நாடோடி! பிழைக்கிற கழுதை இங்கேயே பிழைக்கக்கூடாதா? ரொம்பக் காரியமாக, சிதம்பரம் ஓடினான்.........போயி......" என்று எம்பெருமான் கேட்டார், தோட்டக்காரன் தன் மகன் விஷயமாக முறையிட்டுக்கொண்டபோது.

எஜமானர் எம்பெருமான் பிள்ளை—மான் அண்டு கோ சொந்தக்காரர். தோட்டக்காரன், எம்பெருமான் பிள்ளையின் தகப்பனாருக்குப் பால்ய சினேகிதம். கால வித்தியாசத்தாலே, அவன் தோட்டக்காரனாக நேரிட்டது. அது வேறு கதை. தோட்டக்காரனாக இருந்தாலும்: தன் தகப்பனாருக்குப் பால்ய சினேகிதம் என்பதாலே எம்பெருமான் பிள்ளை தோட்டக்காரனிடம் கொஞ்சம் அன்போடும் அக்கறையோடும் பேசுவது வாடிக்கை. அன்று தோட்டக்காரன் தன் மகனுடைய, 'கெட்ட நடவடிக்கை'யைப்பற்றி முறை

பிட்டுக்கொண்டு வரும்போதுதான், எம்பெருமான் பிள்ளை, நாடோடி—நாய்—கழுதை என்று பேசித் தோட்டக்காரனிடம் தனக்குள்ள அக்கரையைக் காட்டிக்கொண்டிருந்தார்.

"என்ன பண்றதுங்க, நான் எவ்வளவோ சொன்னேன்"

"ஆமாம்! முந்தி அவன் நாகப்பட்டணம் போறபோதே கூட வேண்டாம்னுதான் சொன்னே"

"ஆமாங்க, ஏண்டாப்பா நாகப்பட்டணம் போகவேணும்னு கேட்டேன். போய்த்தான் ஆகணும், அங்கே வேலை கிடைக்கும்னு சொல்லிவிட்டுப் போனான்..."

"போன, பத்தாம் நாள், பாண்டிச்சேரிக்குப் போறேன்னு கடிதம் போட்டான்."

"நானுங்கூடக் கொஞ்சம் சந்தோஷப்பட்டேனுங்களே, தொலையட்டும் பாண்டியிலேதானே, என் மச்சான் இருக்கறான், அவனோடு இருந்து தொலையட்டும்னு நினைச்சேன். அங்கே இரண்டு மாசம் சரியா இல்லை; நான் சிலோன் போகிறேன்டான்னு"

"போறவனோடு போய்க்கொண்டிருக்கிற போக்கு. உழைச்சி, ஊருக்கு அடங்கி இருக்கவேணும்னு, நாகப்பட்டிணத்திலேயே இருக்கமாட்டானு, சிலோன் ஏன் போகணும்? அதுதான் சொல்றனே, இதுகளுக்குக் காலிலே சக்கரம் இருக்கு; சுத்திகிட்டே இருக்கும்."

"நான் தலைப்பாடா அடிச்சிகிட்டேன். டே! மருதாச்சலம் வேண்டாம்டா. நாம்ப ஏதோ கொஞ்சம் கௌரவமா வாழ்ந்தவங்க. கால வித்யாசம், கொஞ்சம் நொந்துபோயிட்டோம்; ஊரோட இருந்து எதுவோ ஒரு பிழைப்புக்கான வேலையைக் கவனிப்போம், நீ இங்கேயே இருடான்னு சொன்னேன்; நீங்க சொல்ற மாதிரியா, அவன் காலிலே சக்க

ரம் இருக்கோ என்னமோ, நாகப்பட்டணம்டான்னு, புதுச் சேரின்னு, கடைசியிலே சிலோனுக்குப் போனான்.

போனான் முட்டாப் பய. இவனை என்னான்னு, எண்ணி யிருப்பாங்க அங்கே. நாடோடிபோலிருக்குன்னுதானே சொல்லி இருப்பாங்க?"

"வேறே என்ன சொல்வாங்க? சிலோனிலே இருந்து மறுபடி தூத்துக்குடி வந்தானாம். இப்ப சிதம்பரத்திலே இருந்து கடுதாசி போடறான், சிங்கப்பூர் போகிறதாக இருக்கிறேன்னு. நான் என்னத்தைச் செய்யறதுங்க."

"என்ன செய்ய முடியும்? அவன் சுபாவம் அப்படி யாகிவிட்டது. நாடோடியாகிவிட்டான். போயி கெட்டு அலைஞ்சு, கழுதே, தானா வந்து சேரும்."

எஜமானர் நெடுநேரம் பேசிவிட்டார். மேலும் அன்று ஒரு கமிட்டிக்கூட்டம், அதற்குப் போகவேண்டிய அவசரம் இருந்தது. தோட்டக்காரனுக்குத் திருப்திதான், என்னமோ எஜமானர் இவ்வளவு அக்கரையுடன், தன்னிடம் பேசினாரே என்பதுபற்றி.

எஜமானர் சொன்னதிலே என்ன தப்பிதம் இருக்கு? பயல், நாடோடியாகத்தான் இருக்கிறான் என்று எண்ணிக் கொண்டே, தோட்டம் போய்ச் சேர்ந்தார், மருதாச்சலத் தின் தந்தை, மார்த்தாண்டம் பிள்ளை.

மான் அண்டு கம்பெனி, எம்பெருமானுடையது; ஆனால் இது தவிர அவருக்கு வேறு பல வியாபாரக் கம்பெனிகளில் தொடர்பு உண்டு. அப்படிப்பட்ட ஒரு கம்பெனியின் கமிட்டிக்கூட்டம்தான் நடந்தது—அதற்காகத்தான் அவ சரமாகத் தன் தோட்டக்காரனிடம் பேச்சை முடித்துக் கொண்டு, எம்பெருமான் பிள்ளை சென்றார்.

கமிட்டியிலே கொஞ்சம் சூடான விவாதம். கமிட்டியாரால் நியமிக்கப்பட்டிருந்த கம்பெனி மானேஜர்மீது புகார்கள்; அவர் சரியாக வேலையைக் கவனிக்கவில்லை என்று. குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்தது எம்பெருமான் பிள்ளை. அன்று குறுக்குக் கேள்விகளையும் அவரேதான் பூட்டினார்.

"ஆமாம் சார்! ஆறும் தேதிதானே ஆற்காடு போனீர்?"

"ஆமாம்! ஆற்காட்டிலேயே சரக்குக் கிடைக்குமென்று சொன்னார்கள், போனேன். சரியா பஸ் சர்வீஸ்கூட இல்லை. பாதிதூரம் ஜட்காவில்கூடப் போகவேண்டி நேரிட்டது."

"அது சரி! வேலையை அக்கரையாகப் பார்க்காவிட்டால் எப்படி ஆகுமய்யா? ஜட்காவிலே போனது ஒரு பெரிய பிரமாதமாக இருந்தது உமக்கு. இப்படி, உடல் குலுங்கக் கூடாது என்று எண்ணுபவர்கள், வீட்டோடு இருக்கவேண்டும்; வேலை பார்க்கிறேன் என்று வருவானேன்? கம்பெனிக்கு நஷ்டம் எதற்கு? உம்முடைய டயரியைப் பார்த்தாலே தெரிகிறதே, நீர் வேலை பார்த்த இலட்சணம். ஆற்காட்டுக்கு ஆறும் தேதி போயிருக்கிறீர்; மறுதினமே திரும்பி ஊருக்கு வந்துவிட்டிருக்கிறீர்?"

"ஆமாம்! வராமல் என்ன செய்வது? ஆற்காட்டிலே சரக்குக் கிடைக்கவில்லை"

"உடனே மாப்பிள்ளைமாதிரி ஊருக்கு வந்துவிட்டீர்—ஏன், ஆற்காட்டிலே இல்லை என்றால், வேலூர் போய்ப் பார்க்கிறது!"

ஆற்காடு போவதற்குப் பட்ட அலைச்சல் கொஞ்சமா? அலைச்சலோடு அலைச்சலா வேலூருக்கும் போகணுமா."

'உம்மாலே முடியலேன்னு சொல்லிவிடவேணும். எதுக்காக, இப்படிக் கல்லுப் பிள்ளையார்போல, ஊரோடு உட்கார்ந்துகொண்டு இருக்கிறவர், மானேஜர் வேலைக்கு வரணும்? நம்ம கம்பெனி வியாபாரத்துக்குச் சுத்தி அலைந்தா தானே நடக்கும். கொட்டி இருக்கிறமே பணத்தை. உமக்கு ஊர் போய் வருவது பெரிய சிரமமா இருக்கு."

"ஊர் சுற்றி அலையாமலா இருக்கறேன். ஆற்காடு போய்வந்த பிறகு அடுத்த வாரமே, சோளிங்கபுரம் போயிருக்கேன்."

"சோளிங்கபுரம் போய்வந்ததை என்னய்யா, என்னமோ சிலோன் சிங்கப்பூர் போய்வந்ததுபோலப் பேசிக் காட்டறே. பிரமாதமான பிரயாணம் செய்துட்டே போய்யா. ஆறும் தேதி ஆற்காடு போய்வந்த ஆசாமி பதினாலாம் தேதி வரைக்கும் ஊரைவிட்டு அசையவே இல்லே. ஒருநாள் சோளிங்கபுரம் போய்வந்தே, பிறகு மறுபடியும் ஏழு நாள், இங்கேயே இருந்திருக்கிறே, பிறகு ஒரு நாலு நாள், எதெதுவோ ஊர் போய் வந்திருக்கிறே......"

"அந்த நாலு நாள், நான் அலைஞ்சு திரிஞ்சது இருக்குதுங்களே, நாய் படாத பாடுபட்டிருக்கிறேன். வெல்லூர் எங்கே இருக்கு, அங்கே போயி, மறுநாளே புறப்பட்டு சித்தூர் போய், வருகிற வழியிலே வேலூரைப் பார்த்துகிட்டு மறுபடியும் ஆற்காட்டுக்குப் போயி, காஞ்சிபுரத்திலே ஒரு மணி நேரம் இருந்து, அந்த வேலையைக் கவனிச்சிக்கிட்டு, மறுபடியும் ஊருக்கு வந்தேன். நாடோடிமாதிரியாகச் சுத்தி இருக்கறேன்"

"ஓஹோ! நாலு ஊரு போயி வந்தது உமக்கு நாடோடிப் பிழைப்பாகத் தோணுதா? நாடோடியாகச் சுத்திறதா

னெய்யா, வியாபாரம் நடக்கும். மாசம் முள்ளங்கி பத்தை மாதிரி, தொண்ணூறு ரூபா வாங்கறயே—வெளியூர் போகாவிட்டா வியாபாரம் எப்படி இலாபம் தரும்—யார் அப்பன் வீட்டிலே இருந்து உமக்குச் சம்பளம் கொடுக்கறது? நாடோடியாமே, நாடோடி. ஆமாய்யா, ஆமாம்—நாங்களெல்லாம் வியாபார சம்பந்தமா வெளியூர் போகாமத்தானே இருக்கிறோம்! நாடோடியாம்! கட்டிப்போட்ட மாடுமாதிரி, பிடிச்சு வைச்ச பிள்ளையார் மாதிரியா, இடிச்சு வைச்ச புளி மாதிரியா உள்ளூரிலேயே இருந்துகொள்ளேன், யார் உன்னை வேண்டாம்னு சொல்றவங்க. நம்ம கம்பெனிக்கு மானேஜராக இருக்கவேணும்னு, நாலு ஊரு அலைஞ்சு திரியத்தான் வேணும் — தூத்துக்குடி தொலைவாச்சே, பெங்களூரிலே குளிராச்சே, நெல்லூரிலே வெள்ளமாச்சேன்னு பேசினா, கம்பெனி என்ன ஆவறது? அலையத்தான் வேணும், திரியத்தான் வேணும், இன்றைக்கு ஒரு ஊரு, நாளைக்கு ஒரு ஊருன்னு போய்த்தான் வரவேணும். இதோ பாரய்யா! மானேஜர்! நான் திட்டமா, கண்டிப்பாச் சொல்லிவிடுகிறேன், கேட்டுக்கோ. என்மேலே குறை சொல்லாதே. நம்ம கம்பெனிக்கு அலைஞ்சு திரிகிற ஆசாமிதான் வேணும். ஊரோடு இருக்கணும், வெளியூர் அடிக்கடி போகமுடியாதுன்னு நினைச்சா, கணக்கைத் தீர்த்துக்கோ. நாலு ஊரு போய் வந்திருக்கிறே, ஏனய்யா, இன்னும் சில இடத்தைப் பார்த்திருக்கக்கூடாதா என்று கேட்டதற்கு, உன் வாய்க் கொழுப்பு. நாடோடியா, நானு அலையறதுன்னு கேட்டிருக்கிறே. இதோ பாரய்யா, வெளியூர் போகவர இருக்கிறதுதான் வியாபாரி இலட்சணம்னு நான் சொல்கிறேன். உள்ளூரோடே இருந்து கொண்டிருப்பவனை, குண்டு சட்டியிலே குதிரை ஓட்டுகிறவன்னு சொல்கிறேன். நீ என்ன சொல்லமுடியும் அதற்கு?

நாடோடியாம்—நானு ஊரு போக வர இருந்தாத்தானே கம்பெனி நடக்கும். நீ நாடோடியா இருக்கவேணும்னு, மக ராஜனுக, நீ உண்டு, உன் வீடு உண்டு, இந்த ஊர் உண்டுன்னு இருந்துகொள்வதிலே எனக்கு ஆட்சேபனை இல்லை. மத்தவங்களுக்கும் ஆட்சேபனை இருக்காது. இங்கே இருக்கிற நாங்களெல்லாம் நாடோடிகதான்; இன்னிக்கி ஒரு ஊரு, நாளைக்கு ஒரு ஊருன்னுபோய் அவர்கள் வியாபாரத்தைக் கவனிக்கிறவர்கள்தான். உனக்கு வேணும் அந்த நாடோடிப் பிழைப்பு — நீ பட்டத்து ராஜா, அரண்மனையைவிட்டு வெளியே வரவேணும், போ.''

கமிட்டி, எம்பெருமான் பிள்ளையின் தீர்மானத்தை ஏக மனதாக நிறைவேற்றிவிட்டது. மானேஜருக்கு வேலை போயிற்று. அடுத்த வாரம்—ஜோலார்பேட்டை ஜங்ஷனில் மலபார் மெயில் வந்து நின்றது. மலபார் மெயிலிலிருந்து எம்பெருமான் பிள்ளை இறங்கிப் பிளாட்பாரத்தில் உலாவிக் கொண்டிருந்தார். பெங்களூர் வண்டியிலிருந்து, எம்பெருமானின் நண்பர் கம்பெனி டைரக்டர்களில் ஒருவர் சம்பந்தம் பிள்ளை, அவர் இறங்கி வந்தார்- "அடடே! பிள்ளையவாளா? மைசூரிலிருந்தா?"

மைசூரிலே இருந்து நேற்றே வந்துவிட்டேன்—பெங்களூரில் கொஞ்சம் வேலை இருந்தது, பார்த்துக்கொண்டு புறப்பட்டேன், நீங்க, கோயமுத்தூரா?"

கோயமுத்தூரிலே காலையிலே கொஞ்சம் வேலையைப் பார்க்கணும்—மத்யானமா பாலக்காடு போகலாம்னு இருக்கிறேன்.''

"நானும் நேரா மெட்ராஸ் போகிறேன், அங்கு போன பிறகு மார்க்கட் நிலவரத்தைப் பார்த்துவிட்டு, மங்களூர் போகணும்......''

"மருவிப்பட்டணாம் போகவேணும்னு சொன்னீரே?"

"ஆமாம், அங்கேயுந்தான் போய்வரணும். வேலை சரியாக இருக்கு, ரயிலில் இடம் சௌகரியமாக கிடைச்சுதா?"

"செகண்டு கிளாஸ் கிடைக்கலே, பஸ்ட் கிளாஸ் வாங்கிக்கொண்டு வருகிறேன்."

"சரி, பாலக்காடு முடிந்ததும், நேரே ஊருக்குத்தானே?"

"ஆமாம்! ஊருக்கு வந்து உப்பங்கழி காண்ட்ராக்ட் வேலையைக் கவனித்துவிட்டு, உடனே ஊட்டி போக வேணுமே, நம்ம பம்பாய் சேட் மூல்ஜி வந்திருக்கிறான் ஊட்டியிலே. என்னமோ அமெரிக்கன் ரேடியோவுக்கு ஏஜண்டு வேணும்னு சொன்னானாம். அதை எடுத்து வைப்போமென்று ஒரு யோசனை."

"செய்யறது. சரி, ரயில் புறப்படப் போவுது. வரட்டுமா?"

இரயில்கள் புறப்பட்டுவிட்டன. இரண்டாம் வகுப்பிலே சம்பந்தம், 'அப்பா! பயல், பணத்துக்குப் பிசாசா அலைகிறான்' என்றுஎண்ணிக்கொண்டேபடுத்தார், எம்பெருமான் பிள்ளையைப்பற்றி. எம்பெருமான், சம்பந்தம் சுற்றுவதற்குச் சளைப்பதில்லை. பணம் எங்கு கிடைக்குமோ என்று மோப்பம் பிடித்துக்கொண்டு அலைகிறான்" என்று சம்பந்தத்தை மனதிற்குள் திட்டிக்கொண்டே, படுத்தார். வியாபாரிகளை ஏற்றிக்கொண்டு இரண்டு இரயில்களும் வெம்பிரமாகச் சென்றன. சிதம்பரம் சந்திரா டாக்கிசில் டீ கடையில், மருத்தாச்சலம், அரைத் தூக்கத்தோடு உட்கார்ந்து கொண்டிருந்தான். உள்ளே 'மாய உலகு' என்ற தமிழ்ப் படக் காட்சி நடந்துகொண்டிருந்தது.

# கள்ளன்

தொல்லை மிகுந்த வேலை; கடினமானது என்று கூற முடியாது; அவ்விதம் நான் சொன்னால் சிரிப்பார்கள்; கையிலே இருப்பது கடப்பாறை அல்ல, மண்வெட்டியுமல்ல, பேனா! தலையிலே மூட்டையுமில்லை, மண்சட்டியுமில்லை, தொப்பி அணிந்திருக்கிறேன்! உடலிலே கோட்டு; உத்யோகம் செய்கிறேன், ஆனால் உள்ளம் என்னமோ, உலைக் கூடத்தில் சிக்கிய இரும்புபோலிருந்தது; ஓயாத விசாரம்; தீராத தொல்லைமட்டுமல்ல, நாளாகவாகத் தொல்லை வளர்ந்துகொண்டே வரலாயிற்று. எவ்வளவோ முயன்றும் அந்தத் தொல்லையைக் குறைக்கமுடியவில்லை. நான், நந்தீஸ்வரர் மில்ஸ் சொந்தக்காரரும், நகர பரிபாலன சபையின் தலைவரும், நகர காங்கிரஸ் கமிட்டியின் போஷகரும், குமரேசர் கோயில் தர்மகர்த்தாவும், கோவாபரேடிவ் சபை உபதலைவரும், ஏழைகள் சகாய நிதிக்குக் காரியதரிசியும், என் தகப்பனாருக்குப் பள்ளிக்கூடச் சிநேகிதருமான வைடூரியம்

செட்டியாரிடம் வேலைக்கு அமரும்போது இப்படி என் மனம் கசக்கிப் பிழியப்படும் என்று எண்ணினதில்லை. அவரும், இன்றுவரையில் என்னிடம் கடுகடுத்துக்கூடப் பேசினவரல்ல. தம்பி! என்றுகூடச் சிலசமயங்களிலே கூப்பிடுகிறார். அதிகமாகக் கோபம் வந்தால், "சுத்தப் பைத்தியக்காரப் பிள்ளையப்பா நீ. எப்படித்தான் நீ பிழைக்கப்போகிறாயோ தெரியவில்லை" என்று கூறுவார். இப்படி, என்னைக் கௌரவமாகவே நடத்துபவரிடம் வேலை பார்க்கிறேன். 'வேலை பார்க்கிறேன்' என்று அர்த்தமில்லாமல் சொல்லவில்லை உண்மையிலேயே, அவருடைய ஆட்கள் வேலை செய்கிறார்கள், அது சரியாகச் செய்யப்படுகிறதா இல்லையா என்பதைக் கவனித்துக்கொள்ளும் வேலைதான் எனக்கு. மற்றவர்கள் வேலை செய்கிறார்கள், நான் அதனை மேற்பார்வை பார்க்கிறேன்.

* * * *

"பையன், பி. ஏ., தேறமாட்டான்போலிருக்கு. ஜோசியர் திட்டமாகச் சொல்லிவிட்டார். அதனாலே உம்மிடம் அழைத்துவந்தேன். எதிலாவது இழுத்துப்போட்டு வையுங்கள். வேறே யார் இருக்காங்க எனக்கு" என்று, என் தகப்பனார், வைடூரியம் செட்டியாரிடம் சொல்லி முடிக்கப் பதினைந்து நிமிஷங்கள் ஆயின. ஆஸ்த்மா இருமல் என் அப்பாவுக்கு. வைடூரியம் செட்டியார், நெடுநேரம் யோசித்து, "சரி! தம்பி நம்மிடம் இருக்கட்டும், சந்தர்ப்பம் போல் பாங்கியோ, முனிசிபாலிடியோ ஏதோ ஓர் இடம் பார்ப்போம். தற்போது, ஒன்றும் காலி இல்லை அங்கே எல்லாம்" என்றார். என் தகப்பனார், "எப்படியோ செய்யுங்க, இனி அவன் உங்க மகன்போல" என்று கூறி என்னை வைடூரியம் செட்டியாரிடம் ஒப்படைத்தார். செட்டியார் அப்போது, 'மாதூர் பூ[illegible]' என்ற ஓர் விடுதி கட்டிக்கொண்

டிருந்தார். அதாவது, வெளியூர்களிலிருந்து வருபவர்கள் வீடு கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள் என்பது அறிந்து, நகரசபையார் தீர்மானம் நிறைவேற்றினார்கள், யாராவது தனவந்தர்கள் முன்வந்து, விடுதிகள் கட்டி, வாடகைக்கு விடவேண்டும், நகர சபையார் இந்தக் காரியத்துக்காக, காலி நிலத்தைக் குறைந்த விலைக்கு விற்பதற்குச் சம்மதிக்கிறார்கள் என்று. அந்தத் தீர்மானத்தை வைடூரியம் செட்டியார் நிறைவேற்றியபோது, பத்திரிகைகள் அவருடைய, பொதுஜன சேவா உணர்ச்சியைப் பாராட்டின. காலி நிலம் மிகக் குறைந்த விலைக்கு வாங்கி, விடுதி கட்டும் பணியை, பார்த்தசாரதிச் செட்டியார் மேற்கொண்டார். அவர் வைடூரியம் செட்டியாரின் இரண்டாம் மருமகன். மருமகனுக்கு மாமனார் உதவிசெய்யாமலிருக்கமுடியுமா? விடுதி கட்டுவதற்கான யோசனைகளை வைடூரியம் செட்டியார் கூறினார்: 'மாதுர் பூமி' என்ற பெயர் சூட்டியதும் செட்டியார்தான். நகரசபையிலே, எதிர்க் கட்சித் தலைவர் செங்கமலம் பிள்ளை, ஒரு வம்புக்காரப் பேர்வழி.

"முனிசிபல் காலி நிலத்தைப் பார்த்தசாரதிச் செட்டியார்போால் குறைந்த விலைக்கு வாங்கியது, உண்மையில் நகரசபைத் தலைவர் வைடூரியம் செட்டியார்தான், என்று ஊரார் பேசிக்கொள்கிறார்களே, அது உண்மையா?," என்று ஒரு கேள்வி கேட்டார்.

"உண்மைதான்" என்றார், நகரசபைத் தலைவராக வீற்றிருந்த செட்டியார்.

எதிர்க் கட்சித் தலைவர், ஆவேசத்துடன் எழுந்து, "இதுதானா பொதுஜன சேவா உணர்ச்சி!" என்று கேட்டார்.

"பிள்ளையவாள்! உட்காருங்கள்; என்ன சொன்னேன்

என்று ஆவேசம் ஆடுகிறீர்கள். முனிசிபல் நிலத்தை நான்தான் கிரயம் வாங்கினேன் என்று ஊரார் பேசிக்கொள்கிறார்களே, அது உண்மையா என்று கேட்டீர்கள். உண்மைதான் என்றேன். ஊரார் அப்படித்தான் பேசிக்கொள்கிறார்கள். ஊரார் எதைத்தான் பேசாமல் இருக்கிறார்கள். ஓட்டர்கள் காலிலே செங்கமலம் பிள்ளை விழுந்து கும்பிட்டார் என்று கூடப் பேசிக்கொண்டார்கள். ஊரார் பேசிவிட்டால், அது வேத வாக்கோ! நிலம் விற்கப்பட்டது; அதனைப் பார்த்தசாரதிச் செட்டியார் வாங்கினார்; அதற்கான ரிகார்டு இருக்கிறது; அதுபற்றி வம்பு பேசுபவர்கள், வாய் வலிக்கப் பேசட்டும், நகரசபை அதுபற்றிக் கவனிக்கத் தேவையில்லை. பார்த்தசாரதிச் செட்டியார் என் மருமகப் பிள்ளையாக இருப்பதாலேயே 'விக்ரயம்' கெட்டுவிட முடியாது. 'மாதூர் பூமி'க்குச் சுண்ணாம்பு சப்ளைக்கான காண்ட்ராக்டு எடுத்து இருப்பவர், கற்பூரப் பிள்ளை; அவர் உமது தம்பி" என்றார். சபையோர் சிரித்தனர். கூடவே சேர்ந்து சிரித்தார், செங்கமலம் பிள்ளையும்.

'மாதூர் பூமி'யில் மொத்தம் நூற்று முப்பது வீடுகள் கட்டத் திட்டமிட்டு, வேலை ஜரூராக நடைபெற்று வந்தது. என்னை அந்தக் கட்டிட வேலைக்கு மானேஜராக்கினார், வைடூரியம் செட்டியார். வேலையாட்கள் வருகிற நேரம், போகிற நேரம், செய்த வேலையின் அளவு, இவைகளைக் குறித்து வைப்பது, கூலி கொடுத்துக் கணக்கு எழுதுவது, வேலை ஒழுங்காகச் செய்யும்படி பார்த்துக்கொள்வது; இது என் வேலை.

இதிலே கஷ்டம் இல்லையே, என்று கூறலாம். வெட்டுவது, குத்துவது, தூக்குவது, அரைப்பது, இவையல்லவா கடினமான வேலைகள்; உனக்கு என்னப்பா, வந்த ஆளைக்

கணக்கு எண்ணுவது, குறித்துக்கொள்வது, வேலையைச் சரியாகச் செய்யும்படி பார்ப்பது, இவ்வளவுதானே, இதிலே என்ன கஷ்டம் என்று கேட்கலாம். நானும் அப்படி எண்ணிக்கொண்டுதான் வேலைக்குச் சென்றேன். அங்கே வேலை செய்ய ஆரம்பித்த பிறகுதான், என் வேதனையான வாழ்வு எனக்குப் புலப்பட்டது.

கட்டிட மேஸ்திரி சொன்னான், இந்தக் காலி நிலம் வாங்கினதிலே, செட்டியார், சரியான அடி அடித்தார்; திரு...விடம் கொடுத்தால்கூட, விலை, மூன்றுமடங்கு அதிகமாகத் தருவான் என்று.

நகரசபைக்குத் தலைவராக இருப்பதால், அவரால், மிக மலிவாக இந்த நிலத்தைத் தட்டிக்கொள்ள முடிந்தது என்றான், செங்கல் கொண்டுவந்தவன்.

இரும்புக் கர்டர்கள், லாரிகளிலே வந்து இறங்கிய போது, "என்ன பஞ்ச காலமாக இருந்தாலும், கிடைக்கிறவர்களுக்குச் சாமான் கிடைத்துக்கொண்டுதான் இருக்கிறது" என்றான், லாரி டிரைவர். "எந்தக் கம்பெனி?" என்று கேட்டேன், "கம்பெனியாவது மண்ணாவது; எல்லாம் மில்டெரியில் ஏலத்தில் எடுத்தது" என்றான்.

இப்படி, அங்கே வருகிறவர்களெல்லாம், 'மாதூர் பூமி' யால் வைடூரியம் செட்டியார் அடைகிற இலாபக் கொள்ளையையே, சொல்லிக்கொண்டிருந்தார்கள். மற்றத் தொழிலாளர்கள் இந்தப் பேச்சைக் கேட்டு, "அதிர்ஷ்டம்டா!" என்று கூறிவிட்டு வேலையைக் கவனித்தனர்; என்னால் முடியவில்லை. மனதிலே பலவிதமான எண்ணங்கள்! எப்படி எப்படி இலாபம் சம்பாதிக்கிறார், ஊரிலேயும் பெரிய மனிதராக இருக்கிறார், இப்படிப் பணம் திரட்டும் இவருக்குக்

கோயிலிலே மரியாதை, தேச சபையிலே இடம், நகர சபையிலே பீடம், சே, என்ன மதி மயங்கிய மக்கள் என்று நினைத்து வருந்தினேன்.

நானும் கடப்பாறையைத் தூக்கியிருந்தால், வேலை அலுப்பிலே இந்த எண்ணங்கள் வராதிருந்திருக்கும்; நான் 'வேலை பார்ப்பவன்.' எனவே, சிந்திக்க வசதி இருந்தது; அந்தச் சிந்தனைதான், என் சித்தத்தைச் சிதைத்து வந்தது.

"டே! தடியா! எவ்வளவு நேரம், அந்த மூட்டையைத் தூக்கிப் போடுவதற்கு; ஆகட்டும் சீக்கிரம், ஆமைபோல நகராதே. அவர் வருகிற வேளை."

"தே, குட்டி! என்ன இது, அன்ன நடை நடக்கிறே; தூக்கு சட்டியை, ஏறு சீக்கிரம், மேலே பார், சுண்ணாம்பு சுண்ணாம்பு என்று அவன் கத்துகிறான்."

"மேஸ்திரி! போதும் சிமிட்டி, செட்டியார், அரை மூட்டைக்கு மேலே கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார். பாழ்பண்ணாதே பொருளை."

மானேஜரல்லவா நான், என் அன்றாட உத்தரவுகள் இவை. முதலிலே சந்தோஷம், கொஞ்சம் பெருமையாகக் கூட இருந்தது, இப்படிப் பல பேர்வழிகளை மிரட்டி வேலை வாங்குவது. நாளாகவாக, இந்த வேலை எனக்குக் கசப்பு உண்டாக்கிற்று. இவர்கள் பாபம், இங்கே இப்படி உழைக்கிறார்கள், ஒரு நிமிஷம் சும்மா இருக்கவிடாமல் நான் கொத்துகிறேன் அவர்களை, பாடுபடும் இவர்கள் பெறுகிற கூலி, அவர்களின் வாழ்க்கைக்குப் போதாது என்பது எனக்குத் தெரியும். குடும்பம் குடும்பமாக வேலைக்கு வருகிறார்கள், குழந்தைகளை மரத்தடியில் தூங்கவைக்கிறார்கள், புளித்த கூழைச் சாப்பிடுகிறார்கள், உழைக்கிறார்கள், பொழுது சாயு

மட்டும்; நான் அவர்களைக் கசக்கிப் பிழிந்து, வீடு போகும் போது கூலி தருகிறேன், ஒரு ரூபா ஆறணாவிலிருந்து ஒன்றேகாலணாவரையில், பல ரகமாகப் பிரித்து.

'மாதுர்பூமி' வாயிலாக மாதம் 13,000 ரூபாய் வரும் என்று வைடூரியம் செட்டியார் குறித்திருந்தார். அந்த 13,000 ரூபாய் நிரந்தர வருமானத்தை அவருக்கு அமைத்துத் தரும் பாட்டாளி மக்களுக்கு அது தெரியும். ஆனால் அவர்கள் மனம் வேலையிலேயே ஈடுபட்டிருக்கிறது; எனவே, "நாம் உழைத்து இவ்வளவு பாடுபட்டுக் கொள்ளை இலாபத்தை வேறு ஒருவர் அடைகிறாரே" என்று எண்ண நேரம் இல்லை. நானோ சுண்ணாம்புச் சட்டி சுமக்கவில்லை; சுதந்தரம் சுகம், சமத்துவம், சமதர்மம் என்ற சுந்தரமான கருத்துக்களைச் சுமந்துகொண்டிருக்கிறேன். கல்லூரிவாழ்வு எனக்கு இந்தச் சுமைதாங்கி வேலையைக் கொடுத்துவிட்டது. அந்த எண்ணங்கள் உள்ளே குடைந்தன. கண்ணெதிரே மாடு போல் உழைக்கும் மக்களைக் காண்கிறேன்; அவர்கள் சரியாக உழைக்கிறார்களா என்று பார்த்துக்கொள்ளும் வேலையையும் செய்கிறேன், அதற்காகப் பணமும் பெறுகிறேன், என் நிலை எப்படி இருக்கும்! மனமோ மரத்துப் போகவில்லை, மார்க்சும் பிறரும் புகுத்திய கருத்துக்களையோ மறந்துவிடவில்லை; உழைப்பவன் கஷ்டப்படுகிறான், உழைப்பவனை உறிஞ்சுபவன் ஊராள்கிறான் என்பது தெரிகிறது விளக்கமாக, அதைத் தடுக்கும் சக்தியோ எனக்கு இல்லை. நமக்கென்ன என்று இருந்துவிடவோ முடியவில்லை. நான் ஓர் பயங்கரமான இயந்திரத்தில் சிக்கிக்கொண்ட சிறு எலியானேன். யந்திரம் சுற்றிக்கொண்டே இருக்கிறது, அதன் கீழே சிக்கிப் பல பொருள் பொடி பொடியாகின்றன. எலியோ சக்கரத்தின் அடியிலே சிக்கவில்லை! உருளையின்

கிளைகளின் ஒன்றின்மேலே இருக்கிறது. என்ன செய்யும் எலி? அந்த நிலை எனக்கு! வைடூரியம் செட்டியாரின் சுரண்டல் இயந்திரத்திலே சிக்கிச் சிதைகிறார்கள் அந்தத் தொழிலாளர்கள், சுரண்டுவது கொடுமை என்பதை உணர்ந்தவன் நான்; சுரண்டல் இயந்திரத்தின் காவலனாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறேன்! எப்படி என் நிலை'!

நான் வேதனையில் மூழ்கினேன்.

அவன் அறியாமல் ஒரு நாள் அந்த மூட்டையைத் தூக்கிப் பார்த்தேன். மூன்று நாளாயிற்று 'சுளுக்கு' தீர. அவனைத்தான் நான் ஒவ்வொரு நாளும், "தடியா! சீக்கிரம் மூட்டையைத் தூக்கு; ஆமைபோல நகராதே" என்று கண்டிக்கவேண்டும். சாதாரணமாகவே, எனக்கு அது வேதனையாக இருந்தது, மூட்டையைத் தூக்கிப் பார்த்துவிட்ட பிறகு எனக்கு அவனைக் கண்டிப்பது என்றால் பழுக்கக் காய்ச்சிய இரும்பைத் தொட்டாகவேண்டுமென்றால், எவ்வளவு கலக்கம் ஏற்படுமோ அப்படி இருக்கும்! என்ன செய்வேன், நான் மேனேஜர், செய்தாகவேண்டும்.

சுண்ணாம்புச் சட்டியைத் தலைமீது வைத்துக்கொண்டு ஏணிமீது ஏறிப் பார்த்தேன், ஐந்தாவது படிக்கட்டிலேயே விழுந்துவிட்டேன்; அதன்மீது ஏறிச் செல்லவேண்டிய பெண்ணைத்தான் அன்றாடம் "அன்ன நடை நடக்காதே, ஆகட்டும் சீக்கிரம்" என்று சொல்லியாகவேண்டும். அதை நான் சொல்லும்போது, எனக்கு உண்டான வேதனையை எப்படிக் கூறமுடியும்! பாடுபடும் அவர்களின் பெருமூச்சைக் கேட்டு, நான் பயந்தேன். அவர்கள் உடலிலே பொழியும் வியர்வையைக் கண்டு கண்டு, என் கண்களிலே நீர் வழியலாயிற்று. வயிற்றுக்காகப் பாடுபடும் அந்த வறியவர்களின் வாட்டமும் வருத்தமும், எனக்கு நன்றாகத் தெரிந்

தது. ஆனால், அதை மாற்றும் வகையறியாதவனானேன், என் செய்வேன்? மார் உடையப் பாடுபடுகிறார்கள்; அவர்களை வேலை வாங்குபவன் நான். எனக்காக அல்ல அவர்கள் வேலை செய்வது, அவர்களுக்காக அல்ல, வைடூரியம் செட்டியாருக்காக. அவர் செல்வம் வளர இவர்கள் உழைக்கிறார்கள், அந்த உழைப்புச் சரியானபடி இருப்பதற்கு நான் கண்காணிப்புக்கு இருக்கிறேன். இந்த எண்ணம் தோன்றத் தோன்ற எனக்கு வேதனை அமோகமாகிவிட்டது; சித்ரவதை நடக்கிறது. நாம் சுத்தி தீட்டித் தருகிறோம், சுரண்டல் வேலை நடக்கிறது, நாம் சக்கரம் சரியாக உருள எண்ணெய் போடுகிறோம். பாட்டாளியின் இரத்தத்தைப் பருக முதலாளித்துவம் துடிக்கிறது; நாம், படி இவ்வளவு, ஆழாக்கு இவ்வளவு என்று அந்த இரத்தத்தை முதலாளித்துவ முறைக்கு அளந்து தரும் வேலையில் இருக்கிறோம். புலியிடம், ஆடுகளை ஓட்டிக்கொண்டுபோய் நிறுத்தும் தொழில்புரிகிறோம். எவ்வளவு இழிவான வேலை. பழியும் பாவமும் நிறைந்த வேலை! பாட்டாளிகளுக்குத் துரோகம் செய்யும் வேலை! இதனையோ நாம் செய்வது? இதைவிட நாமும் கூலியாகலாம். கொடுமையைக் கண்ணாரக் கண்டு சகித்துக்கொள்ளுவதைவிட, கொடுமைக்கு உடந்தையாக இருப்பதைவிட, கொடுமைக்குப் பலியாகும் கூட்டத்திலே ஒருவனாகிவிடலாமே என்று ஏதேதோ எண்ணினேன், என்னென்னவகையாலோ, மனவேதனையைப் போக்கிக்கொள்ளச் சாந்தி தேடினேன், முடியவில்லை. மனதிலே மூண்ட வேதனை கொழுந்துவிட்டு எரியலாயிற்று. காலையிலே வேலை நடக்கும் இடம் போவதற்குப் புறப்படும்போதே, "எப்படி அந்த மனிதத்தன்மையை மாய்க்கும் களத்துக்குப் போவது! எப்படிக் கண்டும் சும்மா இருப்பது" என்று தோன்றும். அங்கே சென்று வேலை நடந்தால் நடக்கட்டும் என்று சும்மா

இருக்கவோ முடியாது. அவர்களை நான் வேலை வாங்கியே ஆகவேண்டும், அதுவே எனக்கு இடப்பட்ட வேலை. என் வேலையை ஒழுங்காகச் செய்கிறேனா என்று பார்க்க, செட்டியார் மாலையிலே வந்து போவார். ஆகவே, நான், அந்தப் பரிதாபத்துக்குரிய மக்களை வேலை! வேலை! சீக்கிரம்! சீக்கிரம்! என்று அதட்டியபடி இருந்தாகவேண்டும், அவர்களை நான் அதட்டும்போதெல்லாம், என் மனதிலே ஒரு சம்மட்டி அடிப்பதுபோல இருக்கும்.

"தம்பி! மாடல்ல, மனிதன்! கண் இல்லையா உனக்கு? கடும் வெயில் என்றுதானே நீ, மர நிழலிலே நிற்கிறாய், காலிலே செருப்புடன். அவனைப் பட்டும் 'சீக்கிரம் சீக்கிரம்' என்று மிரட்டி வேலை வாங்குகிறாயே நியாயமா?"

"நியாயமல்ல! கொடுமைதான், தெரிகிறது. ஆனால், நான் என்ன செய்வேன்; அவர்களை வேலை வாங்கியாகவேண்டுமே, அதுதானே என் வேலை"

"கேட்கிறதா அந்தப் பெருமூச்சு, சுமக்க முடியாத பாரத்தைத் தூக்கினான் அவன், அதனால் அந்தப் பெருமூச்சு. அவன் வயிற்றுக்குப் போதுமான உணவுகூடக் கிடைக்காது இந்த உழைப்பால்"

"உண்மைதான், நான் என்ன செய்வேன்?"

"கொஞ்ச நாளில், உன் கண்கள் பழகிவிடும், இந்தக் கோரக் காட்சிகளைக் கண்டு. உன் செவிக்கு அந்தப் பெருமூச்சு சகஜமான சத்தமாகிவிடும். மனம் உணர்ச்சியற்றுப் போய்விடும். நீ உண்டு, உன் வாழ்வு உண்டு என்ற அளவிலே எண்ணம் தடித்துவிடும். இப்போது ஏதோ மனிதனாக இருக்கிறாய், கொஞ்சநாளிலே, நீயும் ஓர் இயந்திரமாகிவிடுவாய்"

"ஐயோ! நான் என்ன செய்வேன்?"

"உண்மைதான்! பாபம்! உன் நிலைமை பரிதாபகரமானதுதான், நீ இரண்டு இயந்திரங்களுக்கிடையே சிக்கிச் சிதைகிறாய், முதலாளித்வம் அரைக்கும் இயந்திரம், தொழிலாளர்கள் அரைக்கப்படும் மனித உருவிலுள்ள பொருள்கள், நீ இந்த இரண்டும் பொருந்தி வேலை செய்கிறதா என்று பார்த்துக்கொள்ளும் பொறுப்பிலே சிக்கிக் கஷ்டப்படுகிறாய்"

"ஆமாம்! பூனை இருக்கும் இடம் தேடி, கிளியைக் கொண்டுபோய்க் கொடுக்கிறேன்"

"உண்மைதான் பொருத்தந்தான், ஆனால் உன் மனம் அதற்கு இடந்தரவில்லை! அல்லவா?"

"ஆமாம்! என்ன செய்வேன்? ஓடிவிடட்டுமா?"

"எங்கே ஓடப்போகிறாய்?"

"எங்காவது! இந்தக் கோரம் கண்ணிலே படாமல் இருக்கும் இடந் தேடி"

"அப்படி ஒரு இடம் கிடையாதே. எங்கே போனாலும் இதுதான் காட்சி, அதாவது ரஷ்யா தவிர!"

"அங்கே போய்விடுகிறேன்"

"போய்விட்டால், இங்கே இந்தப் பெருமூச்சும் வியர்வையும் நின்றுவிடுமா?"

"நிற்காது; இதை நிறுத்தமுடியுமா?"

"முடியும்!"

"எப்படி?"

"படி! பலமுறைகள் உண்டு, படித்துப் பார்"

என் மனப் போராட்டம் மேலே நான் தீட்டியது. வேதனையைக் குறைத்துக்கொள்ள, நான் படிக்கலானேன். படித்ததால், மேலும் வேதனையே பெற்றேன்.

புத்தகங்கள், நாகரிக போதனை, நல்வாழ்வுக்கான வழிகள், நவயுக உதயம், என்று பலப்பலபற்றி இருந்தன, படித்தேன். இன்பம் என்ற இலட்சியத்தைப்பற்றிய ஏடுகளைப் படித்தேன். இவ்வுலகம் அவ்வுலகம் என்பதுபற்றிய பாகுபாடுகளைக் கூறும் புராண இதிகாசாதிகளைப் படித்தேன். படித்து என்ன பலன் கண்டேன்? பரம்பரை பரம்பரையாகப் பாட்டாளி மக்கள் இதே நிலையில் இருந்து வருகிறார்கள் என்பதை; வேதனை இதனால் அதிகரித்ததே தவிரக் குறையவில்லை. மனிதன் ஏன் அடிமைப்பட்டான்? ஏன் சுரண்டப்படுகிறான்? எப்படி அவனை விடுவிக்கமுடியும்? என்போன்ற மானேஜர்களை வேலை பார்க்கச் சொல்லி வைடூரியம் செட்டியார் போன்றவர்கள், பாட்டாளிகளைப் பதைக்கச் செய்வதுதானா, மனிதன் இவ்வளவு காலமாகியும் கண்டுபிடித்த முறை! வேறு கிடையாதா? குகையிலே வாழ்ந்துகொண்டிருந்த மனிதன், அறிவு வளர்ச்சியால் இன்று வானத்தின் அருகே வாழ்வதுபோன்ற நிலையில் மாடி அமைத்துக்கொண்டான். நாலு மைல் ஐந்து மைல் நடந்து சென்றவன், 400 மைல் ஐந்நூறு மைல ஒரு மணி நேரத்தில் என்று செல்லத்தக்க விதத்திலே விமானம் கண்டு பிடித்தானே! எத்தனையோ துறைகளிலே புத்தம் புதுமுறைகளைக் கண்டு பிடித்தான். வாழ்வதற்குமட்டும், ஆதிநாட்களிலே இருந்துவந்த முறை, வலியோர் எளியோரை வாட்டும் முறை தவிர, வேறொன்றும் கண்டுபிடிக்க முடியவில்லையே! ஏன்? என்ற இப்படிப்பட்ட எண்ணங்கள் தோன்றின, ஏடுகள் படிக்க ஆரம்பித்து. பாட்டாளிகளின்

நிலைமையை மாற்ற ஏன் அறிஞர்கள் முயலக்கூடாது என்று யோசித்தேன். பழங்கால அறிஞர்கள் பரலோகத்தைப் பற்றிய கருத்திலே மூழ்கிக் கிடந்தனர். பிறகு வந்தவர்களோ, கலை, ஜொலிப்பு, ஆகியவற்றுக்கே தமது திறமையைத் தத்தம் செய்தனர். பாட்டாளியின் குரலைக் கவனிக்க மறுத்தனர். முன்னவர்களின் செவியிலே, முரளியின் சத்தமே புகுந்தது. பின்னவருக்கோ, சதங்கை, கிண்கிணிச் சத்தமே புகுந்தது; பாட்டாளியின் பெருமூச்சுக்கு இடமில்லை!

வைடூரியம் செட்டியார்மீது கோபம் பிறந்தது. ஆனால் அந்தக் கோபம் அவர் என் எதிரே நின்று புன்னகை தவழும் முகத்தோடு நிற்கும்போது எப்படியோ பறந்துவிடும். கோபம் மட்டுமல்ல, எனக்கே சொல்ல வெட்கமாகத்தான் இருக்கிறது, கொள்கைகூட ஓடிவிடும். என் மனதுக்கு நேர்மாறான வாதம் புரிவார் அவர்; நான் என்னையுமறியாமல் தலை அசைப்பேன்.

“தம்பி! ஆட்களெல்லாம் ஒழுங்கா வேலை செய்கிறார்களா?” என்று கேட்பார் செட்டியார். ஒழுங்காகமட்டுமா உடல் உருகவேலை செய்கிறார்கள் என்பதைத்தானே வெட்ட வெளியிலே முளைத்து வரும் ‘மாதுர் பூமி’ காட்டுகிறது! இருந்தாலும், கேட்பார் அந்தக் கேள்வியை. நான் அதற்கென்ன சந்தேகம்! அவர்கள் அரும்பாடுபடுவதால்தான், இந்த அழகான விடுதிகள் தோன்றுகின்றன. ஓயாது உழைக்கிறார்கள்” என்றுதானே பதில் கூறவேண்டும்; சுண்ணாம்பும் கல்லும்மட்டுமல்ல, இந்தக் கட்டிடச் சாமான்கள், பாட்டாளியின் இரத்தமும் சதையும்கூடத்தான் ஐயா! என்று கூறவேண்டும். ஆனால் அவர் கேட்கும்போது, அந்த வாசகங்கள் வெளிவருவதில்லை. ‘பரவாயில்லை’ என்று

சொல்லுவேன் நான். மனதறிந்த பொய்! ஆனால் கூசாமல் கூறினேன் அதனைப் பலதடவை. அவர்கள் உழைப்பதைக் கண்ணால் பார்த்து மனக் கஷ்டமுற்றிருந்த நானே, 'பரவா யில்லை' என்றுதான் சொன்னேன், ஏன்? செட்டியார் கேட் கிற கேள்வியின் பாவனையே அந்தப் பதிலை, எப்படியோ என் நாவிலே கொண்டுவந்துவிடும். "இப்போதெல்லாம் ஆட்கள் சரியாக வேலை செய்வதே கிடையாது" என்பார். இவருடைய தோட்டமும், மாடி வீடும், ஆலையும், அதை அடுத்தமனைகளும், 'வேலை சரியாகச் செய்யாததாலா' ஏற் பட்டன? என்ன செய்வது, அவர் அப்படித்தான் கேட்பார், 'ஆமாம்' என்பேன். ஏன் அப்படிச் சொன்னேன், எனக்கே புரியாது, அவருடைய கேள்வி அந்தப் பதிலைத்தான் கொண்டுவரும். சீறும் நாகம் சிறுகுழல் ஒலி கேட்டு, படம் எடுத்து ஆடுகிறதே, அதுபோல, அவர் கேட்பார் சில கேள்விகள், அவைகளுக்குப் பதில், என் கொள்கைக்கு நேர் மாறாக உண்மைக்கு விரோதமாகவே எப்படியோ வரும். அவர் பாட்டாளிகளை உழைக்க வைத்தது மட்டுமல்ல, எப் படியோ என்னை, என் இஷ்டத்துக்கு மாறாகப் பொய்யும் பேசவைத்தார்.

"நீ இரண்டு யந்திரங்களுக்கு இடையே சிக்கிக்கொண் டிருக்கிறாய்" என்று என் மனம் சொன்னது முற்றிலும் உண்மை. அவர்கள்—பாடுபடுபவர்கள் தங்கள் உழைப்பை அவருக்குத் தந்தனர். நானோ, என் உள்ளத்தையே அடகு வைத்துவிட்டேன்—தெரிந்து செய்தேன்—தவிர்க்க முடி யாத நிலையில் செய்தேன்—வழுக்கி விழுந்த வனிதையர், வாழ்வதற்காக விபசாரம் செய்வதாகக் கூறுகிறார்கள், அதற் காக அவர்களை ஏசுகிறார்கள், சமூகத்திலே அவர்களைக் கறை என்றும் கூறுகின்றனர். நான், உள்ளத்தையே விப

சாரத்துக்கு விட்டுவிட்டேன். நான் என்ன சொல்லவேண்டுமென்று, அவர் நினைக்கிறாரோ, அதன்படி சொல்லும் ஒரு மனித இயந்திரமாக மாறினேன். ஆனால் என்னை 'மானூர் பூமி' கட்டிட ஆபீஸ் மானேஜர் என்று மதிப்பாகவே ஊரார் அழைத்தனர்!

இந்த பயங்கர சூழ்நிலையிலிருந்து எப்படியாவது விலகிவிடவேண்டும், என்று தீர்மானித்தேன். ஏதாவது ஒரு சாக்குக் கிடைக்காதா என்று துடித்தேன். அவரோ, என்னை எப்போதும்போலவே அன்பாகவே நடத்திவந்தார். ஒரு முறையாவது, அவர் என்னிடம் கோபித்துக்கொள்ளக் கூடாதா? இல்லையே. "நான் போகிறேன் வேலையில் இருக்க இஷ்டம் இல்லை?" என்று நான் எப்படிச் சொல்வது; சொன்னால் "ஏன் என்ன கஷ்டம்?" என்று கேட்டால் நான் என்ன பதில் கூற முடியும்.

"வேலை நேரம் அதிகமா?"

"சம்பளம் போதாதா?"

"யாராவது ஏதாவது குறை சொன்னார்களா?"

"வேறு ஏதாவது வேலைக்குப் போகப் போகிறாயா?"

"நான் ஏதாவது உன்னைக் கண்டித்தேனா?"

இவ்விதமான கேள்விகள்தானே கேட்பார். இவைகளுக்கு நான் என்ன பதில் கூறமுடியும்? இவை ஒன்றும் அல்லவே, என் மனக் கஷ்டத்துக்குக் காரணம். ஆகவே நான் எதைச் சொல்லி, "வேலையைவிட்டு விலகிக்கொள்கிறேன்" என்று கூறுவது. இந்த மனோ வேதனையிலே நான் சில நாட்கள் சிக்கித் தவித்தேன். கடைசியில் துணிந்து ஒருநாள் நான் அவரிடம், மிகப் பணிவாகவே "நான் வேலையைவிட்டு விலகிக்கொள்ள விரும்புகிறேன்"

என்று கூறினேன். நான் புயலை எதிர்பார்த்தேன். ஆனால் ஏமாற்றமடைந்தேன். அவர் புன்சிரிப்புடன், "ஆமாம் பாவம்! இவ்வளவு படித்துவிட்டு, இந்தப் பயல்களைக் கட்டி மேய்க்கிற வேலையைச் செய்வதென்றால் பிடிக்காதுதான். அடுத்த மாத முதல் பேங்கில் வேலைக்குப் போகலாம்" என்று திட்டமாகக் கூறிவிட்டுப் போய்விட்டார்.

என் வேலை பிடிக்கவில்லை என்பதற்கு அவர் கண்டு பிடித்துக் கூறிய காரணம் என்னைத் தூக்கி வாரிப்போட்டது. ஆனால் எப்படி நான் உண்மையைக் கூற முடியும்! "ஐயா! தாங்கள் ஏழைத் தொழிலாளர்களைச் சுரண்டிச் செல்வவானாக வாழ்கிறீர்கள். அந்த முறை எனக்குப் பிடிக்கவில்லை. அதற்கு நான் உடந்தையாக இருக்க மனம் ஒப்பவில்லை" என்று சொல்லவேண்டும். எப்படி நான் அதனைச் சொல்வது? கல்லூரியைவிட்டு நின்றநிலிருந்து வேலை கிடைக்காமல் அலைந்தபோது, ஆஸ்த்மா இருமலால் என் தகப்பனார் தவித்தபோது, ஒரு வார்த்தை சொன்னதும் எனக்கு வேலை கொடுத்தவர் செட்டியார்; மாதம் அறுபது ரூபாய் தருகிறார்; அன்பாக நடத்துகிறார். அவரிடம் நான், "சுரண்டிப் பிழைக்கிறீர்கள்" என்று சொல்வது நியாயமாகுமா? அவர் மனம் நோகாதா! எனவே, மனதிலே மூண்டெழுந்த கோபம், சோகமாக மாறிற்று; கோபமே, பாதகமில்லை, சோகம், என்னைச் சித்திரவதை செய்தது.

ஒருநாள், என் தகப்பனார், பக்கத்து வீட்டுக்காரரிடம் பேசிக்கொண்டிருந்தார். அந்தப் பேச்சுப் புதியதோர் பயத்தை எனக்குத் தந்தது.

"சௌக்கியந்தானே, மகன், செட்டியாரிடம் வேலைக்குப் போகிறானல்லவா?"

"ஆமாம், அங்கே வேலை கிடைத்த பிறகுதான், நிம்மதி உண்டாயிற்று. புண்யவான் 60 ரூபாய் தருகிறார். சமயம் வரட்டும், வேறு நல்ல வேலையில் நானே அமர்த்துகிறேன் என்றும் சொல்லி இருக்கிறார்."

"செய்வார்; அவருக்கென்ன நினைத்த மாத்திரத்திலே எத்தனையோ வேலைகளை உண்டாக்கமுடியும்."

"நம்ம மகன் குணம்தான் உங்களுக்குத் தெரியுமே. தான் உண்டு தன் வேலை உண்டு என்ற கொள்கை. குனிந்த தலை நிமிரமாட்டான். எஜமானரிடம் பயபக்தி விசுவாசத்துடன் நடந்துகொள்கிறான்."

"சரி! அதெல்லாம் இருக்கட்டும். பிழைக்கவும் தெரிய வேண்டுமே. சம்பளம் 60 என்கிறீர். மேல்வரும்படி என்ன கிடைக்கிறது?"

"மேல் வரும்படியா?"

"சும்மா சொல்லுங்கள். பெரிய இலட்சாதிகாரியிடம் வேலைக்கு இருக்கிறான். நொள்ளை 60 ரூபாய் சம்பளதிப்பதா பிரமாதம்! மேல் வரும்படிதானே, அந்த மாதிரி இடங்களிலே முக்கியம்."

"உங்களிடம் சொல்வதிலே சங்கோஜம் என்ன! ஏதோ அந்தவகையிலே மாதம் ஒரு நூறு ரூபாய்க்குக் குறையாது"

"பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லுங்கள். போன மாதத்திலே, செங்கல் சூளைக்காரன்மட்டும் மூன்று சவரனிலே, ஒரு வளையல் செய்தான், உங்கவீட்டுக்கென்று. மொத்தத்திலே இதுவரை ஒரு காலாயிரமாவது......"

"சிவ சி! எல்லாம் போய் ஆயிரத்து ஐந்நூறு மிஞ்சி இருக்கிறது. அந்தப் பணத்தைக் கொண்டுதான், அடுத்த

மாதத்திலே கலியாணம் செய்துவிடலாம் என்று உத்தேசிக்கிறேன்.''

"செய்துவிடவேண்டியதுதான். கலியாணச் செலவுக்கு மேலாகவே, 'மொய்'ப் பணமும் இனமும் சேர்ந்துவிடும் பயப்படாதீர்."

"கடவுள் இருக்கிறார்; அவர் விட்ட வழிப்படி நடக்கும், ஏதோ, பையன் சாது; கெட்ட பழக்கம், கெட்ட சாவகாசம் இல்லாததாலே, குடும்பம் கொஞ்சம் தலை எடுக்க வழி பிறக்கிறது."

"இராத்திரியிலே நெடுநேரம் விழித்துக்கொண்டிருக்கிறானே என்ன விஷயம்?"

"அவனுக்குப் படிப்பதென்றால் ரொம்பப் பிரியம். இரவெல்லாம் படிக்கிறான். வேலை செய்கிற இடத்திலே, ஒரு ஆளைக்கூடக் கோபித்துக்கொள்ளமாட்டான். அவசரப்பட்டு ஒரு வார்த்தைகூடப் பேசுவதில்லை, மேல் வரும்படி கூட, அவன் வாய் திறந்து கேட்டதில்லை."

"கேட்பானேன்? மாமூல்தானே அது. வழக்கப்படி வீட்டுக்கே கொண்டுவந்து கொடுத்துவிடுவார்களே."

"அப்படித்தான்! ஆனால் மேல் வரும்படி வேண்டுமென்று அவன் யாரிடமும் ஜாடைமாடையாகக்கூடச் சொல்வதில்லை என்று அவன்கூடவேலை செய்பவர்களே ஆச்சரியப்படுகிறார்கள்."

யாரரோ ஆச்சரியப்பட்டது ஒருபுறம் இருக்கட்டும், இந்தப் பேச்சைக் கேட்டு நான் கொண்ட ஆச்சரியமும் அச்சமும் கொஞ்சமல்ல. மேல் வரும்படி! அது என்ன வார்த்தை? இலஞ்சம்! ஆம்! பாட்டாளியின் உழைப்பை வைடூரியம் செட்டியார் அனுபவிக்கிறார். இடையே இருக்கும்

எனக்கும் அதிலே பங்கு கிடைத்திருக்கிறது, எனக்குத் தெரியாமல்!! நான் வஞ்சகத்தால் வாழும் வைடூரியம் செட்டியாரின் போக்கைக் கண்டிக்க எந்த விதத்திலே யோக்யதை உடையவன். எனக்குத் தெரியாமல் என் தகப்பனார் கட்டிட சம்பந்தமான சாமான்களைச் "சப்ளை" செய்யும் வியாபாரிகளிடம், "இலஞ்சம்" வாங்கி வருகிறார், என்ற உண்மை தெரிந்ததும் நான் நடுங்கிப்போனேன். "சப்ளை" செய்பவர்கள் என்னைக் கண்டு சிரிப்பதும், மரியாதை செய்வதும், அர்த்தமற்றது என்று நான் எண்ணிக்கொண்டிருந்தேன், உண்மை துலங்கிற்று. அப்பா பேசினதைக் கேட்ட பிறகு. என்ன கொடுமை இது! எவ்வளவு கேவலம்! என் இலட்சியம், என்ன கதியாகிவிட்டது. "நேற்று அப்பாவைப் பார்த்தேன்" என்று இரும்பு வியாபாரி, மரக்கடைக்காரர், சுண்ணாம்பு விற்பவர், ஆகியோர்கள் சொல்லும்போதெல்லாம், நான் இந்த 'மேல் வரும்படி' விவகாரம் நடக்கிறது, அதனைத்தான் அவர்கள் ஜாடையாகக் கூறுகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளாமற் போனேன். நான் இலட்சியவாதியாக இருந்தேன், அப்பா காரியவாதியாக இருந்தார்!

எனக்குக் கலியாணமாம்! அதுவும், 'மேல் வரும்படி' பணத்தைக் கொண்டாம்! கடவுள் விட்ட வழி என்று இதற்குப் பெயராம்! வேதனை அடைந்திருந்த எனக்கு வெட்கமும் உண்டாயிற்று இந்த உண்மை தெரிந்ததும். வைடூரியம் செட்டியாரைக் கண்டிக்கும் நான், 'மேல் வரும்படி' பெற்றுக் கலியாணம் செய்துகொள்கிறேன் என்றால் சே! என்ன பிழைப்பு இது! பாடுபடுகிறான் பாட்டாளி, பசியோடு போராடிக்கொண்டு. அவன் விஷயத்திலே பரிதாபப்பட்டு, அவனைச் சுரண்டும் காரியத்திலே உடந்தையாக

இருக்கக்கூடாது என்று தீர்மானிக்கும் நான் சுரண்டல் இயந்திரத்திலே சிதறிய சிறு துண்டுகளைப் பெற்று வாழ்வதா? எனப் பிழைப்பல்லவா அது? வேண்டாம் அந்தப் பணம்! வேண்டாம் அந்த வேலை'! 'என்று தீர்மானித்தேன். அன்றிரவு கள்ளச் சாவியிட்டு, அப்பா சேர்த்து வைத்திருந்த மூவாயிரத்தை எடுத்தேன். என்ன செய்வது? யாராரிடம் வாங்கினாரோ அவரவர்களிடம் கொடுத்துவிடுவது என்று நினைத்தேன். அப்பா, தூக்கத்திலே உளறிக்கொண்டிருந்தார், "பையன் சாது! கெட்ட பழக்கம் கிடையாது. ஏதோ அவனாலேதான் குடும்பம் தலை தூக்குகிறது!" என்று பக்கத்து வீட்டுக்காரரிடம் பேசிக்கொண்டிருந்தாரே, அதே நினைப்பு. நான் நள்ளிரவில் கள்ளச் சாவியிட்டுப் பணத்தைக் களவாடுகிறேன்; அவர் தூக்கத்திலே, என்னைச் 'சாது' என்று அழைக்கிறார். என் தலை சுழன்றது! நான் என்ன செய்வேன்? என் இலட்சியம், அந்தப் பணத்தைப் பாதகச் சின்னம் என்று கூறிற்று; தகப்பனாரின் குளறல், அவர் என்னிடம் வைத்திருந்த நம்பிக்கை, குடும்பம் தலை தூக்கவேண்டுமென்பதிலே அவருக்கு இருந்த பிரேமை, இவைகளைக் காட்டிற்று. என்ன செய்வது? நான் மகனாக இருக்கவேண்டுமானால், பணத்தை எடுக்கக்கூடாது; நான் இலட்சியவாதியாக இருக்கவேண்டுமானால் அந்தப் பணத்தை உபயோகப்படுத்தக்கூடாது. இரண்டிலொன்று அவர் கண் விழிப்பதற்குள், தீர்மானித்தாகவேண்டும். ஒரு பக்கத்திலோ பாட்டாளிகளின் துயர மிக்க தோற்றம், அவர்களால் கொழுக்கும் முதலாளித்வம்; அது வீசும் சிறு துண்டுகளைச் சேகரிக்கும் சிறு உருவம், மறுபக்கத்திலே பார்த்தாலோ, கவலை தோய்ந்த என் தகப்பனாரின் முகத்திலே களிப்பு பிறக்கும் குறிகள்; அவர்

அண்டை அயலாரிடம் பெருமையாக என்னைப்பற்றிப் பேசு வனா; இந்த இரண்டு காட்சிகளுக்கும் இடையே, இலட்சியங் களை மனதிலே கொண்டுள்ள நான். திகைப்புடன்! என் நிலையை என்னென்பேன்.

அப்பா திரும்பினார், நான் இருந்த பக்கமாக. விளக்கை அணைத்தேன். இருமினார், பெட்டியை ஓசைப்படாமல் மூடிவிட்டு, மூலையில் பதுங்கினேன்.

"யார் அங்கே?" அப்பா கேட்கிறார்; முறுக்குடன் அல்ல, பயத்துடன்.

"விளக்கு நின்றுவிட்டதோ? காற்று." அப்பா அறி யார் நான் விளக்கை நிறுத்தினேன் என்பதை. தலை யணைக்கு அடியிலே தடவுகிறார். தீர்ந்தது, இரண்டோர் விநாடிகளில் தீப்பெட்டி கிடைத்துவிடும். பிறகு......என் கதி என்ன......"நீயா? ஏன்? இது என்ன காரியம்" என்று அவர் கேட்பார். நான்......என்ன சொல்வது?......என்ன செய்வது?

"கொமாரசாமி! டே! கொமாரசாமி"—அப்பா என்னைக் கூப்பிடுகிறார். தீப்பெட்டியில் குச்சி இல்லை. இருட்டு, பாபம்! விளக்கு இல்லை என்ற பயம் அவருக்கு. பணம் இருக்கிறதல்லவா. அதனால், உதவிக்கு என்னைக் கூப்பிடு கிறார்; நாங்கள் இரண்டுபேர்தானே வீட்டிலே! என்னைத் தவிர வேறு யாரைக் கூப்பிடுவார். ஆனால், நான் எப்படி 'இதோ அப்பா!" என்று கூறமுடியும்.

"டே! அப்பா! கொமாரசாமி!" கொஞ்சம் உரக்கக் கூப்பிட்டுக்கொண்டே, அறையின் நாலா பக்கங்களிலும், கூர்ந்து பார்த்தார். பெட்டிக்கு அருகே நான்.

"யாரங்கே!"—அலறிக் கூச்சலிட்டார்!

மேல் வேட்டியை வீசினேன் அவர் பக்கமாக, முகத்தருகே; பாய்ந்தேன்; அவர் வாயை மூடினேன், வாயில் துணி வைத்து அடைத்தேன்; கை கால்களைக் கட்டிவிட்டேன், அவர் வயதானவர்; போரிட்டதாக எண்ணிக்கொண்டார், என் பலத்துக்கு ஈடு சொல்லமுடியுமா அவரால்? ஐயயோ! திருடன்! இரண்டு வார்த்தைகள்; குளறத்தான் முடிந்தது அவரால்.

தகப்பனார் உருண்டு கிடக்கிறார் கைகால் கட்டப்பட்டு; நான் பக்கத்திலேதான் இருக்கிறேன், பண மூட்டையுடன்! மகன் கள்ளன் வேலையில்; தகப்பனார் பணத்தைப் பறி கொடுத்த நிலையில்! பணத்தைப் பார்த்தேன், நெளியும் அவரையும் பார்த்தேன். என்னையுமறியாமல் கண்களிலே நீர் புரண்டது, என்ன செய்வது? பணத்தை எடுத்துக் கொண்டு, அறையைவிட்டு கூடத்துக்கு வந்தேன். கால்கள் பின்னிக்கொண்டன, மண்டைக் குடைச்சல், மார்வலி! தடதடவென்று கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. மறுபடியும் பதுங்கினேன், என் வீட்டிலேயே நான் பதுங்கினேன்!

"உடை! பிள! ஓட்டின்மீது ஏறு!" வெளியே சத்தம் பலமாகிறது.

"கொமாரசாமி! டே! கொமாரசாமி!" என்னைக் கூப்பிடுகிறார்கள்.

"கிழவனைத் தனியாக விட்டுவிட்டு இவன் எங்கே கிளம்பிவிட்டான்?" பக்கத்து வீட்டுக்காரர் குரல்.

ஓட்டின்மீது ஏறுகிறார்கள். உள்ளே பதுங்கினேன்! விளக்குகள் வெளிச்சத்தைப் பரப்புகின்றன! சில நிமிஷங்களிலே பலர் உள்ளே நுழைவார்கள். நான் பண மூட்டையுடன் பதுங்கிக்கொண்டிருக்கிறேன்; அவர் உள்ளே கட்டி உருட்டப்பட்டிருக்கிறார்.

தைரியமாகச் சென்று "ஏன்? என்ன? தூங்கிவிட்டேன், ஏன் சத்தம்?" என்று கேட்கலாமே என்று தோன்றிற்று. கேட்கலாம். "என்ன தூக்கமடா இது, இவ்வளவு நேரமாகக் கதவைத் தட்டிருேம்" என்பார்கள். 'குடியோ' என்று கேட்கக்கூடும். அத்துடன் நிறுத்தமாட்டார்களே. "எங்கே உன் அப்பா?" என்று கேட்பார்கள். "உள்ளே தூங்குகிறார்" என்று கூறலாம். "என்னடா தூக்கம், ஏகாம்பர மொதலி" என்று கூப்பிடுவார்கள். அவர் எப்படி எழுந்து வருவார்! கண்டு பிடித்துவிட்டால் என்னை என்னவென்று எண்ணுவார்கள்.

'ஐயோ' என்று ஓரே அலறல், என்னையும் மீறிப் புறப்பட்டது அந்தக் குரல்.

"என்னடா தம்பி!" என்று கேட்டனர் பலர், உள்ளே தைரியமாகக் குதித்தவர்கள் அவர்கள். தெருக் கதவைத் திறந்துவிட்டனர். அதற்குமேல் என்ன நடந்ததோ எனக்குத் தெரியாது.

கண்ணை மெள்ளத் திறந்தேன். மங்கலாகவே எங்கும் காணப்பட்டது, மனதிலே தெளிவு இல்லை. மூடினேன், திறந்தேன்; மூடினேன், திறந்தேன்! தலையை இப்பக்கமும் அப்பக்கமும் திருப்பினேன்! என் தகப்பனுர், எனக்காகக் கஞ்சி ஆற்றிக்கொண்டிருக்கக் கண்டேன். அவரைப் பார்க்க தைரியமில்லை எனக்கு. மீண்டும் கண்களை மூடிக்கொண்டேன்.

"ஏகாம்பர மொதலி! எப்படி இருக்கிறன் பையன்?" பக்கத்து வீட்டுக்காரர் கேட்கிறார்.

"ஜுரம் குறையலே. இப்பத்தான் கண்ணைத் திறந்தான், மறுபடியும் மூடிக்கொண்டான்" என்றார் என் அப்பா.

"இரண்டு நாள் ஆகுதே" என்றார் அவர். "ஆமாம் அது பொல்லாத பேயாமே, அது அடிச்சா, ஆள் பிழைப்பதே கஷ்டமாம், என்னமோ நான் செய்த பூஜா பலன், பையன் உயிருக்கு ஆபத்து இல்லாமெ போச்சு" என் தகப்பனாரின் அன்பு கனிந்த பேச்சு.

"என்ன ஆச்சரியமப்பா அது. நடு இராவிலே எழுந்து வந்து, உன் கைகாலைக் கட்டி, வாயிலே துணி அடைச்சி..."

பக்கத்து வீட்டுக்காரர் அன்றிரவு நடந்ததைக் கவனப்படுத்தினார்.

"அதுதான் பேயின் சேஷ்டை; அதனாலேதான், அவன் என்னைக் கட்டிப் போட்டுவிட்டு, தானும் காகூவென்று கூவி, ஊரையே ஒரு கலக்குக் கலக்கிவிட்டான்" என்றார் என் தகப்பனார்.

"நல்ல காலந்தான் உனக்கு. பேய் சேஷ்டையிலே, உன்னைக் கொன்றுவிட்டிருந்தா என்ன செய்வது?" என்றார் பக்கத்து வீட்டுக்காரர். என் அப்பா சிரித்தார். நீங்களெல்லாம் ரொம்பப் பயந்துவிட்டீர்கள் இல்லை" என்று கேட்டார். "அடிவயித்தையே கலக்கிவிட்டது போ, முதலிலே உன் குரல் கேட்டது, 'ஐயயோ திருடன்னு'. வயித்து வலி எனக்கு. அப்பத்தான் தோட்டத்துக்குப் போய் விட்டுக் காலைக் கழுவிக்கொண்டு வந்தேன். திருடன்னு கூவவே, நான் ஓடிப் போயி, எதிர்வீட்டுக்காரரை எழுப்பினேன், ஏகாம்பரம்! ஏகாம்பரம்னு கூப்பிட்டோம், குரல் இல்லை. குமாரசாமியைக் கூப்பிட்டோம். பதில் இல்லை, உடனே எங்களுக்குப் பயமாயிடுத்து. விளக்கு எடுத்துகிட்டு வந்து, வீட்டுக் கதவைத் தட்டினு, திறக்கலே. ஓட்டுப் பக்கமா ஏறி உள்ளே வந்தா ஒரே இருட்டு.

"என்னடா இதுன்னு யோசிக்கிறேம், 'ஐயோன்னு குமாரசாமி கூச்சலிட்டான். என்னடான்னு விளக்கைத் தூக்கிவிட்டுப் போய்ப் பார்த்தா, வாயிலே நொப்பும் நுரையும் தள்ளுது. மரத்தைச் சாய்த்ததுபோல உன் மகன் கீழே கிடக்கிறான்; தலைமாட்டிலே ஒரு மூட்டை கிடக்குது!' சரின்னு அவனைத் தூக்கிக்கிட்டுவந்து கூடத்திலே போட்டுவிட்டு முகத்திலே கொஞ்சம் தண்ணியைத் தெளிக்கச் சொல்லிவிட்டு, நான் உன்னைத் தேடிப் பார்த்தேன்! நீ உருண்டுகிடக்கிறே; கையும் காலும் கட்டிப் போட்டுவிட்டு இருக்கு. வாயிலே துணி அடைச்சிருக்கு. செச்சே, இந்தமாதிரி பேய் பிடிச்சவங்களை நான் எங்கேயும் பார்த்ததில்லையப்பா, நல்ல மந்திரக்காரனைப் பார்த்து, சீக்கிரமா குணப்படுத்து"—பக்கத்து வீட்டுக்காரர் போய்விட்டார்.

தள்ளாடிக்கொண்டு வந்தார் என் அப்பா, "கொமாரசாமி! கண்ணைத் திறடா, கொஞ்சம் கஞ்சிகுடிடா" என்றார்.

என்னைப் பேய் பிடித்துக்கொண்டதாம்! அதன் சேஷ்டைதானும் அன்று இரவு நடந்தவை!

கண்களைத் திறக்க மனமில்லை. அப்பாவோ விடவில்லை. கஞ்சியை வாங்கிக் குடித்துக்கொண்டே யோசித்தேன், ஊரார் எண்ணியதுபோலவே என் அப்பாவும், என் நடவடிக்கைக்குக் காரணம் பேய் பிடித்துக்கொண்டதுதான் என்று எண்ணுகிறாரா, வேறு ஏதாவது நினைக்கிறாரா என்று யோசித்தேன்.

என் அப்பா, என் நெற்றியில் வழிந்த வியர்வையைத் தன் மேல் வேட்டியால் துடைத்துக்கொண்டே, "பைத்தியக்காரப் பிள்ளை! ஏண்டாப்பா அந்த மாதிரி காரியம் செய்ய வேணும். பணம் உன்னுடையது, கேட்டா நான் கொடுத்து விடுகிறேன். அதுக்காக, பாதி ராத்திரியிலே, என்னையுங்

பாடுபடுத்தி, ஊராரையும் உபத்திரவித்து, உனக்கும் தொந்தரவு தேடிக்கொண்டாயே" என்றார். நான் மிரள மிரள விழித்தேன். ஊரார் என்னைப் பேய் பிடித்துக்கொண்டதாக எண்ணிக்கொண்டனர். என் அப்பா என்னைத் 'திருடன்' என்றே தீர்மானித்துவிட்டார். நான் யார் என்பது எனக்கே விளங்கவில்லை. கள்ளன்! நள்ளிரவில் பெட்டியைக் கள்ளச் சாவியிட்டுத் திறந்து, விழித்துக்கொண்ட தகப்பனாரைக் கட்டி உருட்டிய என்னைக் கள்ளன் என்று கூற, யாருக்கும் உரிமை உண்டு!

பாதி ராத்திரியிலே அப்பனைக் கட்டிப் போட்டுவிட்டு, அரை நிர்வாணமாக நின்றுகொண்டு ஆ—ஊ என்று அலறி, அடியற்ற பனைபோல் கீழே மயங்கி வீழ்ந்தான், ஆகவே அது கட்டாயம் பேயின் சேஷ்டைதான்; என்று ஊரார் கூறுகிறார்கள். இரண்டு தீர்ப்புகளும் தவறு! ஆனால் யார் நம்புவார்கள்? எதைக் கூறி மெய்ப்பிப்பது? எனக்கே விளங்கவில்லையே! அந்த மூவாயிரம், 'மேல் வரும்படி'. அதாவது நியாயமாக எனக்குச் சேரவேண்டிய பொருள் அல்ல, பிறருடையது, திருட்டுச் சொத்துப் போன்றதுதான்! அதை நான் பெற விரும்பவில்லை, என்னிடம் அது வந்து சேர்ந்தது, என்னை இவ்வளவு கோலத்துக்கு ஆளாக்கிவிட்டது. அந்த பேயாட்டம்தான் அது. ஆக ஒரு விதத்திலே பார்த்தால், கள்ளன், பேய் பிடித்தவன் என்ற இரண்டும் எனக்குப் பொருத்தந்தான். ஆனால், முழு உண்மையோ அதுவல்ல. நான் இம்சைக்கு ஆளான இலட்சியவாதி! கூண்டுக்குள்ளே இருந்துகொண்டு வெளியே தப்பிச் செல்ல முயன்று, இரும்புக் கம்பிகளின்மீது சிறகுகளை அடித்து அடித்துக் கட்டி அசையாத நிலையில், சிறகுகள் ஒடிந்த சிறு பறவை! என்னைப்போல எவ்வளவுபேர் உள்ளனரோ!

---

TINNEVELLY